## புதிய குடியரசில் சிங்கள பௌத்த முறைப்படி சத்தியப்பிரமாணம்:

# தமிழரசு எம்.பீ.க்கள் கலந்துகொள்ளார்!

விலை: சதம் 25

# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2002, புரட்டாதி 3 உ (19-9-71) ஞாயிறு றஜபு பிறை 28 புத்தகம் 25 இதழ் 43

## அடிவருடித் தமிழர்களின் நிலையென்ன?

புதிய அரசியலமைப்பின் கீழ் இலங்கை குடியரசாகப் பிரகடனப் படுத்தப்பட்ட பின்னர் அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கண்டியில் சிங்கள பௌத்த மன்னர்களின் காலத்து மரபுப்படி சத்தியப் பிரமாணம் செய்வார்கள் என்று இவ்வாரம் கலாசார அமைச்சர் அறிவித்திருக்கிறாரல்லவா?



இந்நாட்டில் வாழும் இன, மத சிறுபான்மையினரான தமிழ் பேசும் மக்களை அவமதிப்பது போல் நடக்கும் இந்த வைபவத்தை தமிழரசு நாடாளுமன்ற உறுப்பினர்கள் முற்றாக பகிஷ்கரிப்பார்கள் என்று தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் சுதந்திரன் நிருபரிடம் தெரிவித்தார்.

"இலங்கை இரண்டு இனங்களைச் சேர்ந்தவர்கள் — நான்கு மதங்களை பின்பற்றுபவர்கள்—பலபண்பாடுகளை கொண்டவர்கள் இணைந்து வாழும் ஒரு நாடு. இந்த நாட்டில் அரசாங்க வைபவங்கள் அனைத்தும் பௌத்த சிங்கள மரபுப்படி நடத்தப்படும் என்று கலாசார அமைச்சர் கூறிடுவது — இந்நாட்டு மொழி, மத சிறுபான்மையினரை அவமதிப்பது போன்ற செயல் என்பதில் ஐயமில்லை.

"சிங்கள பௌத்த மன்னர்கள் கால மரபுப்படி இவ்

(11ம் பக்கம் பார்க்க)

## டாக்டர் கொல்வின் எந்த உலகத்தில் இருக்கிறார்?

'இலங்கையில் சமஷ்டி அரசியலமைப்பினை உருவாக்குவதை தமிழரசுக் கட்சி தனது அடிப்படை இலட்சியமாக வைத்திருக்கிறது; எப்படியென்றாலும், அவர்கள் தாங்கள் விரும்பும் சமஷ்டியின் அளவு எத்தன்மையது பூரணமான சமஷ்டியா, பாதி சமஷ்டியா—என்பதை ஒருபோதும் விளக்கப்படுத்தவில்லையென்று அரசியலமைப்பு அமைச்சர் கலாநிதி கொல்வின் ஆர். டீ. சில்வா மொரட்டுவ வை. எம். சி. ஏ. யில் பேசிய போது குறிப்பிட்டிருக்கிறார்.

'அமைச்சரின் இந்தப் பேச்சு, விடிய விடிய இராமர் கதை கேட்டு, விடிந்த பின் இராமனுக்கு சீதை என்ன முறை என்று கேட்டதுபோல இருக்கிறது. எந்த உலகத்தில் அமைச்சர் இருக்கிறாரென்பது நமக்கு விளங்கவில்லை.

'சமஷ்டி, சமஷ்டி என்கிறீர்களே, உங்களிடம் மாதிரி சமஷ்டி அரசியலமைப்புத் திட்டம் உண்டா என்று இந்நாட்டு அரசியல் கட்சிகள்

(11ம் பக்கம் பார்க்க)

# தமிழா இதோ நீ இன்று ஏற்றிட வேண்டிய சபதம்!



"......மற்றோர் மொழிக்கு கேடுபயக்காது சிங்கள மொழியுடன் தமிழ் மொழிக்கும் சம உரிமை வேண்டுமெனப் போராடுவது தேசத்துரோகமென்றால்—

"எமது மரபு வழித்தாயகத்தின் அரசியல், பொருளாதாரம், பண்பாடு முதலியன சிங்களப் படையெடுப்பால் அழிந்தொழிந்து போகாது தடுப்பதற்கு போராடுவது தேசத்துரோகமென்றால்—

"இந்நாட்டையே தாயகமாகக் கொண்டு அதன் வருவாயின் நூற்றுக்கு அறுபது சத வீதத்தை நல்கும் தமிழ் தொழிலாளரது குடியுரிமை வாக்குரிமைக்குப் போராடுவது தேசத்துரோகமென்றால்—

இதே தமிழ்த் தொழிலாளர்களது அடிமை நிலையைப் போக்கப் போராடுவது தேசத்துரோகமென்றால்—

இன்று இலங்கையில் உள்ள அரசியல் அமைப்பை மாற்றி — சமஷ்டி அடிப்படையில் அதிகாரத்தைப் பிரித்து—அதே நேரத்தில் நாட்டைப் பிளக்காத ஒரு அரசியலமைப்புக்கு வழி கோல நாம் அறப்போர் தொடுப்பது தேசத்துரோகமென்றால்—

—இத்தனை தேசத்துரோகங்களையும் மொத்தமாக நிறைவேற்றி அதன் பலாபலன்களையும் மகிழ்ச்சியோடு அனுபவிப்பேனேயொழிய எனது இனம் ஒவ்வொரு திருப்பத்திலும் இழித்துப் பழிக்கப்பட்டு, சிதைந்து சீரழிந்து காலப்போக்கில் அழிந்துபோவதை சகிக்கமாட்டேன்—

இனத்தின் உரிமைக்காகப் போர்தொடுப்பதால் தேசத்துரோகியெனக் குற்றம் சாட்டப்பட்டு தூக்கு கயிற்றில் தொங்கவிடப்படுவதையே நான் வரவேற்கிறேன்."

—19-6-1957ல் அமரர் வன்னியசிங்கம் நாடாளுமன்றத்தில் பாடிய புதியபுறநானூறு-

# எம்கோமான் வன்னியனாரின் புதிய புறநானூறு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## இலங்கை வங்கிக்கு ஏனிந்த அவசரம்?

இலங்கை வங்கி, அவசர அவசரமாக வங்கியில் கணக்கு வைத்திருக்கும் அதன் வாடிக்கையாளர்களுக்கு தனித் தனியே ஒரு சுற்றறிக்கையை அனுப்பி வைத்திருக்கிறது. இந்த சுற்றறிக்கையில் எந்தமொழியில் வங்கியுடன் தொடர்புகளை வைத்திருக்க வாடிக்கையாளர் விரும்புகிறார் என்பதை இம்மாதம் 20ந் திகதிக்கு முன்பதாக தெரிவிக்குமாறும் அப்படித் தெரிவிக்காத வாடிக்கையாளர்களுடன் வங்கி உத்தியோக மொழியிலேயே—அதாவது சிங்கள மொழியிலேயே—தொடர்பு கொள்ளும் என்றும் கூறப்பட்டுள்ளது.

தமிழர்கள் தாம் தமிழிலேயே தொடர்புகளை வைத்திருக்கப் போவதாக வங்கிக்கு குறித்த திகதிக்கு முன்பு எழுதவேண்டுமென்றும், இப்படிச் செய்வதன் மூலம் வங்கியிலே தமிழில் கரும மாற்றுவதற்கு தமிழ் உத்தியோகத்தர்களும் தமிழ் தட்டச்சாளர்களும் நியமிக்கப்படுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்த முடியும் என்றும் உலகத் தமிழ் இளைஞர் பேரவையின் இலங்கைக்கிளை ஒரு வேண்டுகோளை விடுத்துள்ளது.

இந்நாட்டுத்தமிழ் மக்கள் தங்கள் மொழியுரிமை கோரி கடந்த பதினைந்து ஆண்டுகளாக விடாப்பிடியாக போராடி வருகிறார்கள். மொழியுரிமை கோரிப்போராடும் நமது மக்களுக்கு, சொந்த மொழியிலேயே சகல அலுவல்களையும் செய்யுங்கள் என்று அடிக்கடிவேண்டுகோள்விடவும் நினைவூட்டவும் வேண்டியிருப்பது அவமானமான நிலை என்பதை யாரும் மறுத்திட முடியாது.

ஆங்கிலேயனிடம் சென்று, நீ உன் அலுவல்கள் அனைத்தையும் ஆங்கிலத்திலேயே செய் என்று எந்த ஆங்கிலேயனும் கூறுவதில்லை—கூறவேண்டிய அவசியமுமில்லை! அப்படிக் கூறுவதையோ, கேட்பதையோ ஆங்கிலயேன் அவமானமாகவே கருதுவான்!

இதே போல ரஷிய மொழி பேசுபவனிடமோ வேறு எந்த மொழி பேசுபவனிடமோ சென்று உன் மொழியையே பயன்படுத்து என்று கூறிக்கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை!

ஆனால் இங்கோ — வெட்கங்கெட்ட நிலை! தமிழனிடம் தமிழிலேயே யாவற்றையும் செய்யும்படி பிரசாரம் செய்யவேண்டிய நிலை! அதுவும் தனது மொழியுரிமை கோரி போராடும் தமிழனிடமே தமிழில் எல்லா அலுவல்களையும் செய் என்று கூறுவது எத்துணை வேடிக்கை நிறைந்த வேதனை?

எனவே தமிழர்கள் மத்தியில் தமிழிலேயே சகல அலுவல்களையும் செய்யும்படி பிரசாரம் செய்யும் நிலை எதிர்காலத்திலும் தொடரக் கூடாது—இந்நிலை மாறவேண்டுமானால் 'எல்லாம் தமிழிற் செய்தே—எம் வாழ்வாம் தமிழைக் காப்போம்' என்று தியாகச் செம்மல் வன்னியனாரின் நினைவு நாளிலே ஒவ்வொரு தமிழனும் உறுதிபூண்டு அதை கண்ணும் கருத்துமாக பின்பற்ற முன்வரவேண்டும்!

இது இப்படியிருக்க, இலங்கை வங்கி மிகவும் குறுகிய காலத்தில் இப்படியொரு சுற்றறிக்கையை அவசர அவசரமாக தனது வாடிக்கையாளர்களுக்கு அனுப்ப வேண்டிய அவசியம் என்ன என்று கேட்க விரும்புகிறோம்.

வாடிக்கையாளர்களின் பணத்தில் இயங்குவதே வங்கி. இலங்கை வங்கியில் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழி பேசுபவர்களும் கணக்கு வைத்திருக்கிறார்கள். ஆகவே வாடிக்கையாளர்களின் வசதிக்காக, எந்நாளும் மூன்று மொழிகளிலும் தனது நிர்வாகத்தை நடத்த வேண்டியது இலங்கை வங்கியின் நீங்காக் கடமையாகும்!

அதை விடுத்து திடுதிப்பென கால வரம்பு விதித்து வாடிக்கையாளர்களுக்கு ஒரு சுற்றறிக்கையை அனுப்பி விட்டு, அக்காலக் கெடுவுக்குள் பதில் தராவிடின் சிங்களத்திலேயே தொடர்பு கொள்வோம் என்று மிரட்டுவது ஒரு போதும் நீதி நியாயமாகாது; இப்படிச் செய்வது கடைந்தெடுத்த மொழித் திணிப்பேயன்றி வேறல்ல என்பதே நமது கருத்தாகும்.

**இலங்கை வங்கிமேற்கொண்ட இத்திடீர் நடவடிக்கையின் பின்னல், வங்கி நிர்வாகத்திலிருந்து தமிழை ஒழித்துக் கட்டும் சதி இடம் பெற்றிருக்கிறதென்பதில் துளியும் ஐயமில்லை. தமிழை படிப்படியாக அகற்றுவதன் மூலம் வங்கியில் தமிழர்களுக்குரிய வேலை வாய்ப்புகளும் பறிக்கப்படும் என்று அஞ்சுவதற்கும் நிறைய நியாயமிருக்கிறது!**

எனவே தமிழர்களின் பணத்திலும் இயங்கும் இலங்கை வங்கி தமிழர்களின் தொண்டைக்குள் சிங்களத்தை திணித்திடும் முயற்சியை உடனடியாகக் கைவிட்டு — காலக்கெடு குறிப்பிட்டுள்ள குறித்த சுற்றறிக்கையையும் வாபஸ் வாங்கி—எப்பொழுதுதென்றாலும் தமிழர்கள் வங்கியுடன் தமது தொடர்புகளை தமிழில் வைத்துக்கொள்ளலாம் என்று உத்தரவாதம் அளித்திட வேண்டும்! இப்படிச் செய்வதே வங்கிக்கும் நல்லது என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

# சங்கிலித்தோப்பில் நாகாவுக்கு சிலை நிறுவப்படவேண்டும்!

## டாக்டர் பரமநாயகம் வற்புறுத்துகிறார்!

''காலஞ்சென்ற டாக்டர் நாகநாதனின் பெருமைகள் தமிழ் மக்கள் மத்தியில் என்றும் நிலைத்து நிற்க அவருக்கு ஒரு நினைவுச் சின்னம் அமைக்கப்படவேண்டும்.

''டாக்டர் நாகநாதன் தமிழ் மக்களின் தனிப்பெரும் தலைவராக விளங்கினார். அவர் செய்த சாதனைகள், அவரின் பெருமைகள், ஈட்டிய வெற்றிகள் ஆகியவற்றைத் தமிழினம் என்றும் நினைவுகூருவதற்காக நினைவுச் சின்னம் ஒன்று அமைக்கப்படவேண்டியது அவசியம்.

''இந்நினைவுச் சின்னம் அவரின் குடும்பத்தினர் பரம்பரையாக வாழ்ந்து வந்த சங்கிலியன் தோப்பில் அமையவேண்டும்.

''தற்போது சங்கிலியன் தோப்பு வண்ணை சிவன் கோயிலுக்குரியதாக இருப்பதனல் இச்செயலுக்கு ஒரு குழுவை அமைத்துகோவில் தர்மகர்த்தாவைச் சந்தித்து வேண்டிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

''பொது மக்களிடமிருந்து நிதியைச் சேகரித்து இந்நடவடிக்கையைமேற்கொள்ள வேண்டும்.''

—இவ்வாறு தமிழரசுக் கட்சியின் தொடக்ககால பொருளாளரும் டாக்டர் நாகாவின் நெருங்கிய நண்பருமான டாக்டர் வி. கே. பரமநாயகம் விடுத்துள்ள செய்தியில் கூறியுள்ளார்.

# 'தலைவராகவே பிறந்தவர் எங்கள் நாகநாதன்'

## திருமலை கூட்டத்தில் அமிர்தலிங்கம்

''அரசியல் வரலாற்றிலே தமிழன் தன்மானத்துடன் வாழவேண்டுமென்பதற்காக அரசாங்கத்தை எதிர்த்துத் துணிந்து செயல்பட்ட முதலாவது தலைவன் எங்கள் நாகநாதன் என்பது மறுக்கமுடியாத உண்மை. காடைத்தனம் தலைவிரிக்கும் போது களங்கண்ட வீரனாகச் சமர் புரியத் தயங்காத எங்கள் தலைவன் கண்ணீரைக் கண்டதும் கசிந்துருகிப் போய்விடுவார். இந்தப் பண்பால் அவரிடம் உதவிபெற்ற அரசியல் எதிரிகள் ஏராளம்; ஏராளம்!''

இவ்வாறு 11-9-71 அன்று திருமலையில் நடைபெற்ற நாகா அஞ்சலிக் கூட்டத்தில் பேசுகையில் அடலேறு 'ஆலாலு அவர்கள் கூறினார். பொதுச் செயலாளர் அ. அமிர்தலிங்கம் பேசுகையில் கூறியதாவது:

''வரோதயரை—வன்னியனாரை—ஏகாம்பரத்தை—திருமலை நடராசனை இழந்து தவிக்கும் எங்களுக்கு மற்றோரிழப்பாகிவிட்டது டாக்டர் நாகாவின் மரணம். இரும்பு மனிதரின் இழப்புக்குக் காரணம் 61ல் நடந்த அறப்போரில் அவர் வாங்கிய அடிகளேயாகும்.

அவர்மரணத்தையிட்டோ, வரோதயர் மரணத்தையிட்டோ நாம் கலங்கக் கூடாது: ஏனெனில் உண்மையில் உடல்கள்தாம் அழிந்ததே தவிர அவர்கள் இல்ட்சியமாக மாறி எம்மிடையே வாழுகிறார்கள். இல்ட்சியங்களுக்கு இறப்பில்லாதபோது இவர்கள் எப்படி இறக்க முடியும்?

அரசியலில் இரு வகைத் தலைவர்கள் வாழுகிறார்கள். செயற்கை ஒரு வகை: இயற்கை ஒருவகை; செயற்கைக்கு உதாரணம் சிறிமாவினல் சிருஷ்டிக்கப்பட்ட செல்லையா குமாரசூரியர். இயற்கையான தலைவர்கள் தாம் எங்கள்செல்வா, நாகா, வரோதயர், போன்றோர்.

எண்ணூறு தமிழாசிரியர்களை ஒய்வு பெறச்செய்து விட்டு அறுநூற்றெழுபது புதிய ஆசிரியர்களை நியமித்து இருந்த தொகையைக் காட்டிலும் தமிழாசிரியர் தொகையைக் குறைத்த இந்த அரசு—நூற்றி முப்பது ஆசிரிய இடங்களுக்கு அரோகரா போட்டுவிட்ட அரசு—எங்கள் ஆட்சியில்தான் அறுநூற்றெழுபது தமிழாசிரியர்கள் நியமனம் பெற்றனர் என்று கணக்குவிடப் பார்க்கிறது.''

வவுனியா பா. உ. திரு. செல்லத்தம்பு கூறியதாவது;

சிங்களவரின் முதல் மனிதன் விஜயன் இலங்கைக்கு வந்து இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகள்தாம் ஆகின்றன. ஆனல் இற்றைக்கு நாலாயிரத்து ஐந்நூறு ஆண்டுகட்கு முன்னரேயே—அதாவது கலியுக வருடம் ஐந்நூற்றி இருபத்தேராராம் ஆண்டளவில் கோணேசராலயம் இருந்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. இந்த நிலையில் சிங்கள ஏகாதிபத்தியம் எங்களை அடிமைப்படுத்துவதும், நாங்கள் அடிமையானதும் நீதியானதுதானா?''

### வாசகர்களுக்கு...

அண்ணா — வன்னியர் நினைவு இதழாக இவ்வார சுதந்திரன் வெளிஉருவதால் ஞயுக்தி, தொடர் கதை ஆகிய அம்சங்கள் இவ்வாரம் இடம்பெறவில்லை—அடுத்தவாரம் இவை இடம்பெறும் என்பதை அறியத்தருகிறோம்.

—ஆசிரியர்

# தினகரனின் பொய்ப்பிரசாரத்தை கல்வியமைச்சர் மறுக்கிறார்!

தினகரனின் குட்டு உடைந்தது; கௌரவ கல்வியமைச்சரே தினகரனின் குட்டை உடைத் தெறிந்திருக்கிறார்!

கல்வியமைச்சர் அளித்த பேட்டியொன்று குறிப்பிட்டு 29-8-71 தினகரன் வார மஞ்சரியில் ஒரு செய்தி வந்திருந்ததல்லவா? அச்செய்தியில் 'தமிழர் விடயத்தில் நியாயமற்ற முறையில் அநீதியாக நாம் நடந்து கொள்வதாக தீவுப்பகுதி எம். பி. கா. பொ. இரத்தினம் அடிக்கடி தப்பும் தவறுமான அறிக்கைகளை விடுத்து வருகிறார்' என்று கல்வியமைச்சர் கூறியதாக சொல்லப்பட்டுள்ளது!

இது சம்பந்தமாக, குறிப்பிட்ட தினகரனில் கல்வி அமைச்சர் பெயரால் வெளிவந்த செய்தி உண்மைதானா என்று கேட்டு பண்டிதர் இரத்தினம் கல்வியமைச்சருக்கு கடிதம் எழுதியிருந்தார்.

இதற்கு பண்டிதருக்கு கல்வியமைச்சரிடமிருந்து கிடைத்துள்ள பதில் தினகரனின் முக மூடியையும் குட்டையும் பொய்ப் பிரச்சாரத்தையும் உடைத்தெறிவதாக அமைந்து இருக்கிறது.

தமிழில் அமைச்சர் பண்டிதருக்கு 28-8-71ம் திகதி அனுப்பியுள்ள பதில் தந்தி வருமாறு:—

'உங்கள் தந்தியும், கடிதமும் கிடைக்கப்பெற்றன. நீங்கள் சுட்டிக் காட்டிய செய்தி நான் தினகரனுக்கு கூறியதாக எனக்கு நினைவில்லை'

தினகரன் இனியாவது தனது பொய்ப்பிரசாரத்தை நிறுத்துமா?

# அந்நியரை எதிர்த்த வன்னியரை மறவோம்!



இலங்கைத் தமிழருக்கு அந்நியர்கள் இலங்கைத் தீவுக்கு உள்ளேயே இருக்கிறார்கள் தமிழை எதிர்ப்பவர்கள்—தமிழ் நலத்தை அபகரிக்க முயல்பவர்கள் — தமிழினத்துக்கு இன்னல் தருபவர்கள்—தமிழரைப் பொறுத்தவரை அந்நியர்களே. அந்நியரை 'வெளியேற்றுவோம் என்று குரல் எழுப்பி வெள்ளையனை விரட்டிச் சுதந்திரம் பெற்ற அந்த நிமிடத்திலேயே நாம் உள் நாட்டில் வாழும் பெரும்பான்மை இனத்தவரான அந்நியருக்கு அடிமையானோம். இந்த உள்நாட்டு அந்நியரை எதிர்த்துப் போர்க்கொடி உயர்த்தி—அடியும் உதையும் ஏற்றுத் தியாகத் தழும்புகள் தாங்கிய மாபெரும் விடுதலைத் தலைவரே எங்கள் வன்னியசிங்கம் ஆவார். அந்நியரை எதிர்த்த வன்னியரை நாம் ஆயுள்வரை மறவோம்!

—அடலேறு ஆலாலசுந்தரர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் மடல்

''கனம் நீதிபதி அவர்களே,

''இவ்வழக்கில் நான் குற்றவாளியா அல்லவா என்று கேட்கப்பட்டது. நேரடியாக ஆம் அல்லது இல்லை என்று பதிலளிக்க என்னால் சாத்தியமில்லை. தென் இலங்கையில் வாழும் தமிழர்கள் மீது காடைத் தனங்கள் கட்ட விழ்த்து விடப்பட்டுள்ளன. 'தமிழர் வேட்டை' சர்வசாதாரணமாகி விட்டது. பொலீசார் நீதியை நிலை நாட்டுவதைவிடுத்து காடைத்தனம்புரிவோருக்கு பகிரங்கமாக உதவிசெய்கிறார்கள். ஆனால் தமிழர்கள் சாத்வீகமாக சிங்கள சிறீக்கு எதிர்ப்புக்காட்டி தமிழ் சிறீ எழுதினால் உடனே கைது செய்யப் படுகிறார்கள். இன்று இந்த இலங்கை, தமிழ் பேசும் மக்களுக்கு சமாதானமோ பாது காப்போ இல்லாத ஒரு உண்மையான நரக மாய் இருக்கிறது. எனவேதான் இலங்கை யிலுள்ள தமிழர் சிறைச்சாலை குறித்து அச்ச மற்றவராய் இருக்கின்றனர்; சிறைக்குப் போக எந்தத் தமிழரும் தயங்குவதில்லை; காந்திய வழியில் தமிழர் சுதந்திரப்போராட் டத்தை நடத்துபவருள் ஒருவன் என்றமுறை யில் எனது சமூகத்துக்கு செய்யவேண்டிய தெளிவான தீர்க்க முடியாத கடமை இது. ஆதலால் விசாரணைக்குப் பின் நான் குற்ற வாளியெனக் கண்டால் எவ்வித தயக்கமு மின்றி சட்டம் அனுமதிக்கும் ஆகக்கூடிய சிறைத்தண்டனையை விதிக்குமாறு கௌரவ நான் கெஞ்சிக்கேட்டுக்கொள்ளுகிறேன். தயவு செய்து விளைவுகளைப்பொருட்படுத் தாது உங்கள் கடமையைச்செய்யுங்கள்—''

இணைந்து இதோ எங்கள் ஈழத் தமிழ்நாடு என்று காட்டியவர் எங்கள் வன்னியசிங்கம்!

அவர்கள் பலர்; நாம் சிலர்; அசைத்து விட முடியுமா சிங்கள ஏகாதிபத்தியத்தை— என்று கேலிபேசியோர் வாயடக்கி, காலி முகத்திடலில் சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்த்து அறப்போர் நடாத்தி கண்ணீரும் இரத்தமும் சிந்தி—உலகத்தின் கண்களை எங்கள் பால் திருப்பி விட்டவர் அவர்!

திருகோணமலை பாத யாத்திரைக்கு திட்டம் தீட்டி—பாத யாத்திரையை நடத்திக் காட்டி பைந் தமிழர்களுக்கு எழுச்சியை யூட்டி —பிரசித்திபெற்ற தமிழர்களின் விடுதலைத் தீர்மானத்தை அங்கு நிறைவேற்றி—ஆதிக்க வெறிபிடித்து நின்ற பண்டாவைப் பணிய வைத்து—வடக்கும், கிழக்கும் ஈழத் தமிழர் களின் சொந்தத்தாயகம்; அங்கு தனியான தோர் அமைப்பின் கீழ் சுயாட்சி நடத்திட தமிழர்கள் உரிமையுள்ளவர்கள்; தமிழே அங்கு ஆட்சிமொழி என ஒப்பந்தம் செய்து கொள்ள வைத்தவர் எமது வன்னியசிங்கம்!

சாதி வெறியைச் சாடி—தீண்டாமைப் பேயை ஓட்டி—'ஒன்றே குலமும்—ஒருவனே தேவனும்' எனும் கருத்தை தமிழரிடையே நிலைநாட்டிடத் தீவிரமாக பணியாற்றிய சமு தாய சீர்திருத்த சிற்பி எங்கள் வன்னியசிங்கம்!

எங்கும்—தமிழ், எல்லாம் தமிழ், எதிலும் தமிழ் என்று நாடெங்கும் முழங்கி, தமிழியக் கத்துக்கு மூலகர்த்தாவாக நின்றவர் எமது கோமான் வன்னியசிங்கம்!

திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களால் செந்தமிழர் பூமிபறிபோவதைக்கண்டு பொங்கி யெழுந்து அதை முடிந்தவரை தடுத்து நிறுத் தியதுடன் தமிழர்கள் தமது நிலத்தைக் காத்திட பரந்து சென்று ஈழத்தமிழ் நாடெங் கும் குடியேற வேண்டும் என்ற கருத்தினை உள்

அறியும்போது இதில் ஆச்சரியமடைய ஏது மில்லை!

பிரச்சினையை நுணுகி ஆராய்ந்திடின், சிங்களவரும் இலங்கையின் வந்தேறு குடி களே என்பதை நிலைநாட்ட முடியுமாயினும் —இன்று சிங்களவர்களே இலங்கையில் பெரும்பான்மையோராக வாழுவதையும், இலங்கை மண்ணில் அவர்களுக்குள்ள உரி மையையும் யாரும் மறுத்திடவில்லை!

சிங்களவர்கள் இன்று அனுபவிக்கும் அந் தஸ்தையும் சலுகைகளையும் யாரும் எதிர்த் திடவில்லை — சிங்கள அரசாங்கம் காட்டு மிராண்டித்தனமான அநாகரிகப் போக்கை கைவிட்டு ஜனநாயகரீதியிலும் மனிதத்தன் மையுடனும் நடக்க வேண்டுமென்றுதான் எல்லோரும் விரும்புகிறார்கள்.

இலங்கையிலுள்ள அரசியலமைப்பில் சிங் களவர்கள் பெரும்பான்மையோராக இருப் பதை அந்த நாட்டில் வாழும் தமிழர்களை பயமுறுத்திடவும், அழித்திடவும் அவர்க ளுக்கு தரப்பட்டுள்ள 'லைசென்ஸ்' என்று யாரும் பொருள் கொள்ளக்கூடாது. தமிழர் கள் நாடெங்கும் சிதறி வாழ்ந்திடவுமில்லை; தொடர்பான பிரதேசத்தில் அவர்கள் எண் ணிக்கையில் பெரும்பான்மையோராக வாழு கிறார்கள்.

தமிழர்கள் வெறும் சிறுபான்மையினர் அல்லர் அவர்கள் வேறுபட்ட தனி இனத்தினர். இலங்கையை தங்கள் தாய்நாடாகக்கொண்டு இலங்கை மண்ணுக்காக இரத்தம் சிந்திப் போராடியவர்கள். தமிழர்களே இலங் கையை பொன்விளையும் பூமியாக்கியவர்கள்.

இதற்காக தமிழர்களுக்கு கிடைக்கும் நன்றிக்கடன் — துப்பாக்கிச்சூடு — சிறை — அடக்குமுறை, காடைத்தனம்!! தமிழர்கள், ஒரு சிறுபான்மை இனமல்ல — ஆனால் வேறு பட்ட தனி இனத்தினர் என்பதை நாம் மீண் டும் வலியுறுத்துகிறோம்: இந்தக்காரணத்தி னால், தங்கள் மொழியையும் வாழ்க்கை முறைகளையும் காப்பாற்றிக்கொள்ள போராடுவதற்கு தமிழர்களுக்கு பூரண உரிமையுண்டு.

இந்த உரிமையை அவர்களுக்கு மறுத்து —படிப்படியாக அவர்களை அழித்திட முனை வதை நீதி, நியாய உள்ளம் படைத்த எவ ரும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது; மனித உரிமை சாசனமும், மரபுகளும் கூட இதை அனுமதிக்காது! இருந்தும் தங்கள் மொழியான தமிழ் மொழிக்கு முறையான இடத்தைக் கோரும் தமிழர்களுக்கு எதிராக சிங்கள அரசாங்கம் வஞ்சம் தீர்த்து வரு கிறது!

# இரண்டு பெரிய இதயங்கள்!

—இது நண்பா, ஏறத்தாழ பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் சிங்கள சிறீ எதிர்ப்பு வழக்கிலே நீதிமன்றத்தில் குற்றவாளிக்கூண்டில் நின்றபடி எம் அருமைத்தலைவர் வன்னிய சிங் கம் செய்திட்ட வீரமுழக்கம் என்பதனை நீ மறந் திருக்கமாட்டாய்! கோப்பாய்க்கோமான் நம் முடன் இருந்து, நமக்காக போராடிய வாதா டிய காட்சிகள் எல்லாம் அழியாத ஓவியமாக நமது மனத்திரையில் காட்சி தந்தபடி இன்றும் இருக்கின்றன; ஆனால் காலமோ பன்னிரண்டு ஆண்டுகள் ஓடிவிட்டன—நாம் அவரை இழந்து! அவர் வகித்த இடம் இன்னும் நிரப்பப்படா மல் அப்படியே கிடக்கிறது! ஆம், வேறுயாரா லும் ஈடுசெய்ய முடியாத அளவு ஆற்றலும், சக்தியும், வீரமும் விவேகமும், தியாகமும், தன்னல மறுப்பும், தூய்மையும் வாய்மையும் உடைய செல்வம் அன்றோ நம் வன்னியசிங்கம்!

நமக்கெல்லாம் அரசியலில் 'அ'கரம் எழு தச்சொல்லித் தந்தவர் அவர்; வீரத்தையூட் டியவர் அவர்; விடுதலை உணர்ச்சியைத் தந்த வர் அவர்! பொட்டுப்பூச்சிகளாக புன்மைத் தேரைகளாக வாழ்ந்த தமிழர் சமுதாயத் திற்கு புரட்சிக்கருத்துக்களையூட்டி, புதுமை எண்ணங்களை மலரச்செய்தவர் அவர்!

அரண்மனையிலிருந்த அரசியலை ஆலமரத் தடிக்கு கொண்டு வந்தவர். தமிழ் நாட்டில் அறிஞர் அண்ணா என்றால், ஈழத்தில் அதனைச் செய்து காட்டியவர் எங்கள் வன்னிய சிங்கம்!

ஈழத் தமிழ் நாட்டின் அரசியல் தலைமை பிரபுத்துவ, மேற்தட்டு வர்க்கத்திடமேயிருந் ததை மாற்றியமைத்து — அரசியல் தலைவன் அல்லது பாராளுமன்ற உறுப்பினன் சாதாரண மக்களின் தொண்டனேயென்பதை நிலை நாட் டியவர் அமரர் வன்னியசிங்கம்! சாதாரண ஏழை, நடுத்தர மக்களும் அரசியலைப் பற்றி சிந்திக்கும் நிலையை ஏற்படுத்தி வைத்தவர் வன்னியசிங்கம்!

ஈழத்தமிழ் நாட்டின் மூலை முடுக்கெங்கும், சந்துபொந்தெங்கும் சுற்றித்திரிந்து அரசியல் விளக்கங்கள் அளித்து, விடுதலை உணர்ச்சிக்கு வித்திட்டவர் அவர்! சிங்களவர்கள் ஆளப் பிறந்தவர்களுமல்ல — நாம் அடிமையாக மாளப் பிறந்தவர்களுமல்ல—நாமும் ஆண்ட இனம்; அதிகாரம் செலுத்திய இனம்; எங்கள் நாட்டில் எங்கள் அரசை அமைத்து எங்கள் தமிழன்னைக்கு மணிமகுடம் சூட்டிட வேண்டும் என்கின்ற இன்றைய தமிழர்களின் இன உணர்ச்சிக்கு கால்கோளிட்டவர் அவர்!

கிழக்கும் மேற்கும் சந்தித்தாலும் வடக் கும் கிழக்கும் ஒன்றுபடாது; ஒருபோதும் இணையாது ஈழத் தமிழ்நாடு! என்று எட்ட நின்று ஏளனம் பேசியோர் நாவடக்கி, தனது இரத்தம், வியர்வை, கண்ணீரைப் பாலமாகக் கொண்டு மட்டக்களப்பையும், யாழ்ப் பாணத்தையும், வவுனியாவையும், மன்னாரை யும், திருமலையையும் மலைநாட்டையும்

ளத்தை தொடும்படி எடுத்துக் கூறியவர் எங்கள் வன்னியசிங்கம்!

எல்லாவற்றுக்கும் மேலாக — பொது வாழ்வில் இறங்குபவன் எப்படி வாழ வேண்டும் எனபதற்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்து காட்டியவர் எமது வன்னிய சிங்கம்!

நண்பா, இருண்டு கிடக்கும் தமிழினத் தின் எதிர்காலத்தினூடே அகல் விளக்காக

இலங்கையின் உத்தியோக மொழிச் சட்டம், சிங் கள மொழியைப் பலப்படுத்தவும், வளர்க்கவும் கொண்டுவரப்பட்டதொன்றல்ல — ஆனால் தமி ழினத்தை பூண்டோடு கருவறுப்பதை நோக்கமாகக் கொண்டே கொண்டுவரப்பட்டது.

தமிழ்த் தலைவர்கள்—சிறந்த பாரா ளுமன்ற வாதிகளாக நின்று—சிங்களவர் களை சாந்தப்படுத்தி — அவர்களின்

நமக்கு தெரிந்திடுவது வன்னியசிங்கம் நமக்கு காட்டிச் சென்ற தியாகப் பாதைதான்! அவர் ஆற்றிய உரைகள்; அவர் சிந்திய கருத் துக்கள் எம் நெஞ்சங்களில் நீக்கமற நிறைந்து நின்று எம்மை வழி நடத்துகின்றன; நம் சிந்தை அணு ஒவ்வொன்றும் அந்த தியாகச் சுடரின் திவ்விய ஒளி பரவி நின்று நமக்கு வழி காட்டும்போது சோர்வும், சலிப்பும் நம்மை விட்டு நீங்குகின்றன! புதிய உறுதி, வேகம் பிறக்கிறது; இன விடுதலைப் போராட்டம் துரிதமாக நடக்கவேண்டும் என்ற எண்ண மும் வலுக்கிறது!

வன்னியரும் அண்ணாவும் நமக்கு வழி காட்டும் காவல் தெய்வங்கள்; நம் இதயத் தோடு இதயமாக-எண்ணத்தோடு எண்ணமாக கலந்துவிட்டவர்கள்!

நண்பா, நாம் இங்கு அடி உதைபட்ட போது—தமிழினத்தார் இங்கு கண்ணீர் சிந்திய போது—நமககாக தமிழ்நாட்டில் ஒரு பெரிய இதயம் அழுதது; அந்த அன்பு இதயம்— அந் தப்பாச இதயம் — நம் அருமை அண்ணாவினு டையது என்பதை உனக்கு கூறவேண்டுமா?

இதோ, அண்ணாவின் பேனா, அன்று 30-4-61ல் 'ஹோம் லாண்ட்' ஏட்டில் நமக்காக எழுதிய வாசகங்கள்; இன்றுகூட பொருத்த மானதாக அவை இருக்கின்றன; படித்துப் பார்!

''இலங்கை அரசு படபடப்பான ஒரு நிலையில் இருப்பது போலத் தோன்றுகிறது. முரட்டுத்தனமான பிடிவாதமும், வெட்க மற்ற தன்மையும், கொடூரமும், மற்றவர் கருத்துக்கு செவி சாய்க்காத போக்கும், இலங்கை அரசின் இயல் பான தன்மைகளாக மாறிவிட்டதை நாம்

மனத்தை மாற்ற எவ்வளவோ பாடுபட் டார்கள். எப்பொழுதும்பிரச்சினைகளை விவா தித்து ஒரு சமரச உடன்பாட்டுக்கு வரவும் அவர்கள் தயாராக இருந்தார்கள்.

தமிழ்த் தலைவர்கள் வெறிபிடித்து இயங்கவில்லை—அவர்கள் மொழிப் பிரச் சினையில் நடைமுறைக்கு ஏற்ற கௌரவ மான உடன்பாடு ஒன்றைக்காண கடைசி வரை முயன்றார்கள். ஆனால் சிறிமா இதற்குத் தயாராக இல்லை.

எனவே தமக்கு இழைக்கப்பட்டுவரும் அநீதி களுக்கு எதிராக, இலங்கைத் தமிழர்கள் தங் கள் விடுதலையைப் பெற்றிட போராட்டப் பாதையிலே வீரநடை போட்டு சென்று கொண்டிருக்கிறார்கள்.

துப்பாக்கிகளும், தோட்டாக்களும் அடக்கு முறை களும் அவர்களை சோர்ந்துபோய் எப்பொழுதாவது உட்கார வைத்ததில்லை.

எங்கள் உடம்புகள் இங்கு இருந்தாலும், எங்கள் ஆத்மா அவர்களுடனேயே இருக்கிறது; விடுதலைக் குப் போராடும் அவர்களுக்கு எங்கள் மரியாதையை தெரியப்படுத்துகிறோம். நியாயமான இலட்சியத்துக் காக போராடும் அவர்கள் தங்கள் போராட்டத்தில் வெற்றிபெறவேண்டுமென்றும் வாழ்த்துகிறோம்''

—படித்தனையா நண்பா, அண்ணன் பத்து ஆண்டுகளுக்குமுன் எழுதிய கருத்தினை — அண்ணாவும் வன்னியரும் எங்களுடனேயே இருக்கிறார்கள் என்கின்ற உறுதியுடன் விளைவு களைப் பாராது கடமையைச் செய்திடுவோம்.

உன் அன்புத் தோழன்

கோவை-மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்ணாவின் எண்ணமும் வன்னியரின் உள்ளமும்!

**எம். எஸ். எஸ்.**

தமிழை வளர்க்கும் தாய் நாடும், தமிழை இழக்கும் ஈழநாடும் (இழக்கும் என்ற ஈனச்சொல்லுக்கு மன்னிப்பு) ஏதோ ஒரு வகையிலாவது சரி நிகர் சமானமானது என்பேன்! எவ்வகையில் என்று கேட்க முன், தாய்நாடு ஒரு அண்ணாவையும் ஈழநாடு ஒரு கோமானையும் தந்ததால் என்பேன்!

தமிழ் நாட்டுக்கு அண்ணா உயிராகவும் உடம்பாகவும் என்றும் மக்களிடையே இருப்பார்! அதுபோன்று, கொல்லங்கலட்டி, மாவிட்டபுரத்தில் பிறந்து கோப்பாய்க்கோமகனான அன்பு அண்ணல் வன்னிய சிங்கம் தமிழ்பேசும் அத்தனை மக்கள் உள்ளத்திலும் இருப்பார்!

13. 4. 1940ல் வெளிவந்த "மாவை மாணவன்" என்னும் ஓர் சஞ்சிகையில் அப்புக்காத்தாக அன்றிருந்த அமரர் தீட்டிய கட்டுரையில் சில பகுதிகளை ஈண்டு நினைவுறுத்துவது சாலவும் பொருத்தமாகும். இக்கட்டுரையின் மூலம் ஆங்கிலம். அதனை சுதந்திரன் தனது 18. 9. 60. திகதியன்று வெளியிட்டது. கட்டுரையின் மொழி பெயர்ப்பை (தமிழாக்கம். அன்பர்: செ. குமாரசாமி) 25. 9. 60ல் வெளியிட்டது.

இதோ அமரரது சில பொன் வாக்கியங்கள்;

"சகிப்புத்தன்மை வளர்ந்தாலே ஜனநாயகம் நிலைக்க முடியும் எனவும், பொது இலட்சியத்துக்காகக் கூட்டுப்பணிபுரிய மாணவர்கள் பழகவேண்டும் எனவும்; பெருமளவில் செல்வாக்கிருந்தாலன்றி, ஒருவர் அரசாங்க சேவையில் சேர நினைக்கவும் இயலாது, எனவும், சீலமும் அறிவும் ஒத்துப்போவதில்லை என்றும், தன் தன் பொறுப்புக்களைத் தானாகவே நிர்வகிக்கக் கூடியவனாய் வாழ வேண்டும்" என்றும், கமக்காரர்களாகவோ, வியாபாரிகளாகவோ, தொழிலாளிகளாகவோ வாழ்வது தமது அந்தஸ்திற்குக்குறைவானது என்று படித்த வாலிபர்கள் கருதுகிறார்கள் என்றும்" இது போன்ற தீர்க்க தரிசன வாக்கியங்களை தமிழ் மக்களுக்காக அன்று எழுதியுள்ளார்கள்;

"தங்க மெனில் ஈழமந்தத்
தரங்கமணி ஈழ மதன்
தலையாய் ஓங்கும்
அங்கமெனில் அணி
வளரும்
யாழ் நகராம் அந் நகரில்
அரசு செய்யும்
சிங்க மெனிற் சேவைபுரி
வன்னியசிங்கம் நீயச்
சேவைக்குற்ற
பங்கமெனில் நீயிந் நாட்
பாருலகை நீத்த தெனப்
பகருவோமே"

எனப் பண்டிதர் ச. இராமச்சந்திரன் இரங்குகின்றார்.

'அன்பு பொங்கும் மேதை, நீ!
அருள் கனிந்த ஜோதி, நீ!
பண்பு உயர்ந்த தூயன். நீ!
பணிவு கொண்ட
தொண்டன், நீ!

எனக் கூறுகின்றார்: சி. பொன்னுத்தம்பி அவர்கள்.

'The Ceylon Tami'ls numbering 15 lakhs or more are distinctively different and occupy Northern and Eastern parts of Ceylon, an area of about 10,000 square miles approximately out of the total of 25,000 square miles. Though a minority, they are not scattered in the midest of the Sinhalese majority community but live as a compact group in the Tamil areas in the Northern and Eastern part of Ceylon—

—"Swarajya of 27. 5. 1961 by Dr. A. W. Berchmans"

"இலங்கைத் தமிழர்கள் ஏறத்தாழ 15 லட்சம். இவர்கள் இலங்கையின் வடகிழக்கு பகுதிகளில் வசித்து வருகின்றார்கள். இலங்கையில் முழு நிலப் பரப்பாகிய 25,000 சதுர மைல் பரப்பில், இலங்கைத் தமிழர்கள் 10,000 சதுர மைல் பரப்பில் வசித்து வருகின்றார்கள். இவர்கள் சனத் தொகையில் மிகவும் குறைந்தவர்களென்றாலும், பெரும்பான்மையினராகிய சிங்களவர்களுடைய நிலப் பரப்பில் கலவாமல், தங்கள் பகுதிகளிலேயே மிகவும் நெருக்கமாக இருந்து வருகின்றார்கள்."

என்று சுவராஜ்ஜியா என்னும் சஞ்சிகையில 27-5-61ல் கலாநிதி ஏ. டபிள்யூ, பேச்மன்ஸ் என்பவர் கூறுவதில் இருந்து, தமிழர்கள் வசித்து வரும் இடங்களை உலகம் சிந்திக்க வேண்டும்—இப்பகுதிகளையாவது காப்பாற்ற வேண்டும் என்ற அறப்போரிலேயே அமரர் தமது பொன்னான வாழ்க்கையை அர்ப்பணித்துள்ளார்கள்;

"The united nation's organisations must evince a keen interest in the welfare of national minorities and there must be provision in the charter for national minorities wherever they are oppressed, to present their case in the world forum and get real justice

—Dr. A, W, Berchmans

"ஒடுக்கப்படும் சிறுபான்மையினரின் பிரச்சினைகளை எடுத்து அலசி ஆராய்ந்து அவர்களுக்கு நல்ல தீர்ப்பை வழங்குவதற்கு ஐக்கிய நாடுகள் சபை முன்வர வேண்டும். அவர்களுடைய சாசனத்தில், சிறுபான்மையினரின் குறைகளை எடுத்துரைக்கவும் நீதி வழங்கவும் தேவையான சரத்துக்களைச் சேர்த்துக் கொள்ளவும் வேண்டும் என மீண்டும் கலாநிதி ஏ, டபிள்யூ. பேச்மன்ஸ் வேண்டுகின்றார்.

நீதி வழங்க இருக்கும் பெருந்தன்மை வாய்ந்த பெருமக்களுக்குப் பெருமகனார் பேச்மன்ஸ் கூறியவைகளை ஞாபகப்படுத்துவோமாக!

"மயிலே! மயிலே இறகு போடு" என்று மண்டியிட்டு மன்றாடினாலும், மயில் இறகு தரும் என்பது கிடையாது. ஆண்டவனை வேண்டினால் ஒரு சமயம் கிடைக்கக்கூடும் என்று பக்த கோடிகள் கூறக்கூடும். அவர்கள் கூறட்டும். அவர்களை இதுபோது ஞாபகத்தில் வைக்காமல், மயிலிறகு பெறுவதற்கு மல்யுத்தம் செய்தாவது பெறவேண்டும்! எனச் சங்கற்பம் எடுக்க வேண்டும்.

இலங்கையில் ஈழத் தமிழர்கள் பூர்வீக குடிகள். தமிழர்களுக்கென்று கலாச்சாரம் உண்டு. பண்பாடு உண்டு. தமிழை வளர்ப்பதற்காக இறைவனே சங்கம் நிறுவி தமிழ் வளர்த்த கதை யாவரும் அறிந்ததே! இது இவ்வாறு இருக்க, ஏதோ படித்து விட்டார்கள், பதவியில் ஏறிவிட்டார்கள், அவர்கள் கூறுவது தான் தேவவாக்கு என ஏமாறாமல், மயிலிறகு பெறுவதில் நாட்டமாக இருப்போம்.

1965-ம் ஆண்டு வெளிவந்த சிவதொண்டன்சிறப்பு மலரில், யோகசுவாமிகளின் மணிவாக்கு என 14-11-55 திகதியுடன் கீழே வரும் இந்தனை உள்ளது:

"தமிழா கமஞ் செய்யவா!
அல்லது சிங்களவன்
காலை நக்கு"

அமரர் வன்னியசிங்கம் இன்று இல்லை. அன்பு ததும்பும் சுவாமிகளும் இன்று இல்லை—ஆனால் இவர்கள் தந்த சிந்தனைச் செல்வம் என்றும் இருக்கும்.

சிந்திப்போமா? செயலாற்றுவோமா?

# அண்ணாவும் வன்னியரும் தமிழினத்தின் இரு கண்கள்!

**சி. க. சண்முகநாதன்**
(தலைவர்: வன்னி அண்ணா மறுமலர்ச்சி மன்றம்)

முற்காலத்தில் தரணியை ஆண்ட தமிழினம் பின்னர், அதிகார வர்க்கத்தின் கோரப்பிடியிலும், இனத்தை விற்றுப் பிழைத்து வாழும் துரோகச் சின்னங்களின் பிடியிலும் சிக்கிச் சீரழிந்த வேளையில், இனத்தைக் காப்பாற்ற தங்கள் வாழ்வையே அர்ப்பணம் செய்தவர்கள் பலர். இருப்பினும், 'இருவர்' தமிழுலகம் உள்ளளவும் மறக்க முடியாதவர்கள். இனத்தின் காவலர்கள் தாங்களேயென்று தங்களைத்தானே மகுடம் சூட்டி புகழ்பாடும் போலித்தலைவர்கள் மலிந்து விட்ட இக் காலகட்டத்தில் தமிழினத்தின் வாழ்வுதான் தங்கள் வாழ்வு என்ற தூய்மையான எண்ணத்தோடு பணியாற்றி தமிழுக்காகவே தங்களை அர்ப்பணித்துவிட்ட மாமேதைகள் தமிழகத்திலே 'பேரறிஞர் அண்ணா' அவர்களும், ஈழத்திலே அமரர் வன்னியசிங்கம் அவர்களுமாகும்.

### அண்ணா காட்டிய அரசியல்

—தமிழகத்தில் இந்தி ஆதிக்கத்தைச் செலுத்துவதன் மூலமும், பிரிவினை கோரிக் கொண்டிருந்த தி. மு. க. வை முறியடிப்பதன் மூலமும், தங்களது சதித் திட்டத்தினை நிறைவேற்றி விடலாமென்று கங்கணம் கட்டியிருந்த அன்றைய ஆட்சியாளரின் கண்களில் மண்ணைத்தூவியது போன்ற சில துணிச்சலான காரியங்களை பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றியதன் மூலம் இயக்கத்தையும் இனத்தையும் காப்பாற்றி வைத்தார். ஒரு தடவை தேர்தலில் தோல்வி கண்டவுடன், மறு தடவை எப்படி வெற்றி பெறலாமென சிந்திப்பவன் ஒரு அரசியல் வாதியாகிவிட முடியாது... அடுத்த தேர்தலைப் பற்றிச் சிந்திப்பவன் அரசியல் வாதியல்ல... அடுத்த தலைமுறையைப் பற்றி யார்சிந்திக்கின்றானோ அவனே உண்மையான அரசியல்வாதியாகிவிட முடியும்.

அண்ணாவைப் பொறுத்த வரையில், தோல்விகளைக் கண்டு அவர் துவளவில்லை. தோல்விகளே வெற்றிக்கு முதற்படியாகுமென்ற அசைக்கமுடியாத நம்பிக்கையுடன் அடுத்த சந்ததி தமிழகத்தில் தமிழினமாக வாழவேண்டும் ...அதுவும் தமிழ் நாட்டில் வாழ வேண்டுமென்று சிந்தித்தார். அதற்காகவே பல தடவைகள் போராட்டங்கள் நடாத்தி சிறைவாசமும் அநுபவித்தார். தி.மு.கழகம் தமிழினம் தலைநிமிர அயராதுழைக்கின்றதென்பதை மக்கள் உணர்ந்த காரணத்தால் பேரறிஞர் அண்ணாவிடம், மக்கள் ஆட்சிப் பொறுப்பினை ஒப்படைத்தார்கள்.

தங்களுக்காக அயராதுழைத்த தலைவனுக்கு தமிழினம் 'நன்றிக் கடன்' புரிந்தது. தமிழாய்ந்த தமிழ் மகனே தமிழ் நாட்டின் முதல் மகனாக வரவேண்டும், என்ற புரட்சிக் கவிஞரின் கூற்றிற்கேற்ப 'பேரறிஞர் அண்ணா' முதலமைச்சரானார். அவரது நீண்ட நாளைய கனவும் நிறைவேறியது. தமிழனுக்கொரு நாடு — தமிழ்நாடு பெற்றுக் கொடுத்ததன் மூலம் தமிழ் உள்ளளவும் அவரது நாமம் நிலைத்து நிற்கும். அரசியல் வாழ்வில் படித்த அறிஞர்கள் தான் வீற்றிருக்கமுடியுமென்றவொரு நிலையினை மாற்றியமைத்து, சாதாரண பாமர மக்களும் அரசியலென்றால் என்ன வென்று புரிந்து கொள்ளக் கூடியளவுக்கு மக்களிடையே, அரசியலைப் புகுத்தி, மூட நம்பிக்கைகளில் மண்டிக்கிடந்த மக்களை தனது பகுத்தறிவுச் சிந்தனையினால் கட்டியெழுப்பி புத்துணர்ச்சி பெற்ற [illegible] சிந்தித்து விட்டால் எதையும் சாதித்து விடலாம் என்பதற்கு தமிழக அரசியலில் ஏற்பட்ட திருப்பங்களே முன்மாதிரி காட்டுவனவாகும்.

### வன்னியர் வாழ்வு

ஈழத்தைப் பொறுத்தளவில் எமது இனம் இன்று தத்தளிப்பதற்குக் காரணம்... துரோகிகள், பதவியென்ற எலும்புத் துண்டிற்கு ஆசைப்பட்டு இனத்தைக் காட்டிக் கொடுத்தமையே. தமிழினத்திற்கு துரோகம் இழைக்கப்பட்டு விட்டது என்பதையுணர்ந்தவுடன், இனத்தைக் காப்பாற்ற ஒரு இயக்கம் தேவையென்பதை, தந்தை பெரியவர் செல்வா, அமரர் நாகா போன்ற பெருந்தகைகளுடன், அமரர் வன்னியசிங்கம் சிந்தித்தார். இருளையகற்றும் உதயசூரியனாக தமிழரசுக் கட்சி பிறந்தது. இயக்கத்தின் வளர்ச்சிக்காக ஆரம்பகாலத்தில் பலவித துன்பங்களையும் அமரர் வன்னியனார் தாங்க நேரிட்டது.

வன்னியரைப் பொறுத்த வரையில், அவருக்கென்று தனித்திறமையொன்றுண்டு. எந்தவித திட்டங்களையும் முன்கூட்டியே கூறிவிடுகின்ற விசேட ஆற்றல் நிறைந்தவர்... அவர் முன் கூட்டியே கூறிவிடுகின்ற விடயம் பின்னர் நடைபெற்று விடுமாகையால், அவரது விளக்கத்துடனேயே பல திட்டங்கள் கைவிடப்பட்ட சம்பவங்களுமுண்டு. தமிழினம் இந்நாட்டில் இரண்டாந்தரப் பிரசையாக வாழுவதையும், பதவிக்காக இனத்தையே காட்டிக் கொடுத்து வாழும் கயவர்களையும் அவரால் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. தமிழ் சமுதாயம் இந்நாட்டில் மானத்துடன் வாழ வேண்டுமாயின் முதலில் 'களைப்புல்' களைந்தெடுக்கப்பட வேண்டுமென்று முழங்கினார்.

### தீண்டாமை யொழிப்பு

தமிழினம் தலைதூக்க வேண்டுமானால், முதலில் சாதியென்ற பெயரால் உயர்வு தாழ்வு பேசி, சிறுபான்மையினத்தவருக்குள் மேலுமொரு சிறுபான்மையினமென்று ஒதுக்கப்படுவது அநீதியென்று பிரச்சாரம் புரிந்ததோடு நில்லாது, செயலிலும் காட்டினார். உயர் சாதியில் பிறந்த அவர் தனது உறவினரின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாது. சாதி வேற்றுமைகளைய அயராதுழைத்தார். ஓரளவு வெற்றியும் கண்டார். அமரர் வன்னியர் இன்று இருந்திருப்பின், நிச்சயம் சாதிப்பிரச்சினைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்திருப்பார்.

தமிழினம் உரிமை பெற்ற இனமாக வாழவேண்டுமென்ற இதயத்துடிப்பினால், இரவுபகல் ஓய்வின்றி உழைத்தார். போராட்டங்களின் போது காடையர்களால் தாக்கப்பட்டதால் அவர் நோய் வாய்ப்படைய நேர்ந்தது, இனத்தைப்பாதுகாக்க உழைக்கின்ற வேளையில், பிரதேசத்திலும் அவர் கண்காணிப்பாக இருந்தார். தமிழ் பிரதேசத்தில் எங்கெல்லாம் ஊடுருவல் நடைபெறுகின்றதோ, அங்கெல்லாம் ஓடோடிச் சென்று அதைத் தடுத்து நிறுத்தினார். தமிழினத்தின் தலைவிதி காலத்திற்குக் காலம் இனத்திற்காக உழைக்கின்ற தியாகச் செம்மல்களை இழப்பது தானென்பதாகி விட்டது. தமிழகத்தின் ஒளி விளக்கு பேரறிஞர் அண்ணாவும், தியாகமாமாலை அமரர் வன்னியனாரும் இன்று எம்மை விட்டு மறைந்துவிட்டாலும், என்றும் மறையாத மாணிக்கங்களாக இரு தியாகிகளும் ஆற்றிய தொண்டுகளும் தியாகங்களும் வானளாவ உயர்ந்து நிற்கின்றன;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஹிம்சைவழி நின்ற சிங்கம்!

நொந்த உளம் சாந்தி பெறுமுன்னே; எங்கள்
நோய்தீர்க்கும் மாமருந்து மறைந்து போனர்
வெந்ததெங்கள் தமிழ் நெஞ்சம்; வெறுமையுடன்
வெறுப்புற்றுத் தவிக்குதிங்கே; வானேர்
சொந்தமுடன் வரவேற்று மாலைசூடி
சொர்க்க புரித் தமிழாழும் கோப்பாய்க்கோமான்
சுந்தரம் சேர் வதனத்தோன் வன்னியசிங்கம்
சுடர்நினைவில் சேருதற்கோ நாகா சென்றுர்...?

கனித் தமிழின் புகழ் மணக்கும் கோப்பாய் தந்த
கண்ணியம் சேர் கடமை மிகு வன்னியசிங்கம்
பனித்த விழிக் கண்ணுக்கித் தமிழர் நெஞ்சை
பரிதவிக்கவிட்டு வருடம் பதினென்றுயாச்சு
இனித் தமிழர் கதியெல்லாம் கண்ணீராமோ...?
''இல்லை; எங்கள் ஆசியுண்டு; காலமெல்லாம்
தனித்த நறும் புகழுடனே தமிழ் வாழும்
தரணியெல்லாம் நம் பெருமை தழைத்து ஓங்கும்''

என்றெமக்கு உன் நினைவாய் ஆசி கூறும்
எழில் தமிழின் அடலேறு அஞ்சாநெஞ்சன்
குன்றனைய தோளுடையான் சிறையும் சென்ற
குணக்குன்று அகிம்சை வழி நின்ற சிங்கம்
என்றென்றும் நம் நினைவில் உள்ளமட்டும்
ஏன் கவலை...? எழுதமிழா; விழி தமிழா!
தின்றிங்கே நம் மினத்தை விற்று வாழும்
தீயோரைப் பொசுக்கிடவே ஆசிவேண்டாய்!

—''கல்முனைக் கலைராஜி''

★

# இதுவே தொண்டு

அண்ணவைப் போற்றுகிறோம் அண்ணவுக்கு
அழகான சிலைகளெலாம அமைக்கின்றோம் நாம்
கண்ணியத்தைக் கடமையினைக் கட்டுப்பாட்டைக்
கடுகளவும் கடைப்பிடிக் கின்றோமா இல்லை!
எண்ணிப்பார்! இதையெல்லாம் தமிழா! இன்றே
எழுந்துவா! இன் தமிழைக் காப்போமென்று
அண்ணனவன் அமரருல கமைதிகாண
அவனுக்குச் செய்கின்ற இதுவே தொண்டு.

தமிழுக்காய் வாழ்ந்தான்; தமிழ்நாடொன்றைச்
சமைத்தங்கே தமிழ்த்தாயை அரசிலேற்றி
தமிழுக்குத் தலைகொடுக்கும் தம்பிமாரைத்
தன்பின்னே அரசாள ஆக்கிவைத்துத்
தமிழுக்காய் உழைத்ததாலே உயிரை நீத்தான்
தமிழறிஞன் அண்ணவின் வழியில் நின்று
தமிழுக்குத் தலைதரினும அஞ்சோமென்று
தமிழ்காக்கப் படைதிரட்டு! இதுவே தொண்டு;

ஈழத்து மண்ணைப்பார் இனக்கொலைக்கு
எழுந்ததொரு பகைநின் றுடுதிங்கே!
வாழத்தான் பிறந்தோம் நாம் தமிழரிங்கே
வாய்பொத்தப் பிறந்தோமா? இல்லை! இல்லை!!
வேழத்தை வீழ்த்துமிரு தோள்கள் தட்டி
வேங்கையினை வெல்லுகின்ற வீரங்காட்டி
மாளத்தான் வரினுமஞ்சோம்! மானங்காக்க
மலைமலையாய்ப் படைதிரட்டு! இதுவே தொண்டு;

''வண்ணமொழித் தமிழினுக்கு வாழ்வு தந்து
வரலாறு படைத்திட்ட தலைவரெல்லாம்
கண்ணீரில் நாம் தவிக்க எமைப் பிரிந்து
காலனொடு ஏகிடினும் கலங்கா நின்று
எண்ணமெலாம் தமிழாக இருக்கவேண்டும்!
எழுகின்ற பகையைநின் றெதிர்க்க வேண்டும்!''
அண்ணனவன் சொன்னதிது. அவன் வழியில்
அணிதிரட்டித் தமிழ்காப்போம்! இதுவே தொண்டு:

—த. கோபாலகிருஷ்ணன்

★

# காலிமுகக் களத்தில் நின்றேன்

எத்தகைய வினுக்களைத்தான் எதிரிக் கூட்டம்
எம்தலைவர் வன்னியரைக் கேட்டிட்டாலும்
சித்தமது கலங்காமல் பதில் உரைக்கும்
செம்மல் அவன் கோப்பாயின் கோமான் எங்கள்
முத்தமிழின் கரை கண்டோன் அறம் வளர்த்தோன்
முடிமன்னர் என்றாலும் அநீதி என்றால்
எத்தகைய இடர்வரினும் எதிர்த்து நிற்பான்
என்றைக்கும் இறக்காத பெயரைக்கொண்டான்.

''செந்தமிழுக்கே தொண்டு செய்யும் மக்கள்
செத்தழிவதில்லை உண்மை என்னும் சொல்லை
எந்தை செல்வா வலக்கரமாய் விளங்கிவிட்டு
இறைபதமே அடைந்த சிங்கம் இன்றும் எங்கள்
சிந்தையிலே இருக்குதென்றால் அவர் எங்கள்
செந்தமிழுக்கே செய்த தொண்டுதானே?
அந்தமில்லாப் புகழ் கொண்டான் அழியவில்லை
அன்னாரின் பரம்பரையே தமிழர் கூட்டம்

பாண்டவருள் சகாதேவன் தன்னைப்போலும்
பல்லவருள் பார்த்திப மன்னன் போலும்
தீண்டாத மக்களுக்குக் காந்தி போலும்
சிங்களம் சேர் தமிழருக்குக் கிடைத்த செம்மல்
பூண்டோடு தமிழினத்தை அழிப்பதற்கு
போர் முரசு கொட்டி நின்ற வெறியருக்கு
மாண்டிடினும் மானம்தான் பெரிது என்று
மார்புதட்டிக் காலிமுகக் களத்தில் நின்றேன்;

— சோமலிங்கம்

# நெஞ்சம் மறப்பதில்லை!

—வி. எல். பெரைரா—

நினைத்து நினைத்து பார்க்கிறேன், நினைக்க நினைக்க நெஞ்சம் நனைந்து இனிக்கும் இன்ப நிகழ்ச்சி: ஆம், என் வாழ்வில் மறக்கமுடியாத நிகழ்ச்சி தான் அது:

சிந்தனையைச் சுழல விடுகின்றேன். சிந்தை பதித்து வருடங்களைப் பின்நோக்கி நடைபோடுகின்றது. 1958-ம் ஆண்டு ஈழத்தின் சரித்திரத்தில் மறக்க முடியாத குருதிக் காட்சி—ஆம், வீரமும், சோகமும், வெட்கமும், தலைகுனிவும், பீதியும் ஒன்றுசேர அமைந்த காட்சி; ஏன் இந்த வளைவு? இனக் கலவரத்தைத் தான் குறிப்பிடுகின்றேன். அந்த இனக்கலவரத்தின் இரத்தக்கறை அழியாத அந்தக் காலம்...!

1959-ம் ஆண்டு தைத் திங்கள் பிறந்தது. ஈழத்தில் ம. பொ. சி.மன்றத்தினர் தைத் திங்களில் ''தமிழர் விழா'' என ஒரு பெருங் கூட்டத்தை நடத்த இருந்தனர்; ஆம் அப்போது கொழும்பில், இனக்கலவரத்தின் பின் அரசியல் தலைவர்கள் கலந்து கொள்ள இருக்கும் ஒரே ஒரு கூட்டம் அதுதான். அப்போது நான் அம்மன்றத்தின் இணைச் செயலாளர்களில் ஒருவன். விவேகானந்தா மண்டபத்தில் விழா ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.

விழாவில் பேசுவதற்கு அஞ்சா நெஞ்சன் திரு. வன்னியசிங்கத்தையும், லங்கா சமசமாஜக் கட்சியின் சார்பாக இருவாட்டி விவியன் குணவர்தனவையும், இலங்கைப் பொதுவுடமைக் கட்சியின் சார்பாக திரு. பிரேம்ஜியை அழைத்திருந்தோம்.

விழா மண்டப முற்றத்தில் உள்ள கம்பத்தில் வில் புலி கயல் பொறித்த கொடி பட்டொளி வீசி வீரம் பேசியது. சிறிது சிறிதாகக் கூட்டம் சேர்ந்து மண்டபம் நிறைந்து வழிந்தது. வெளியே நெருங்கிய கூட்டம். திரு. வன்னியசிங்கம் குறிப்பிட்ட நேரத்திற்குள் வந்து விட்டார்;

விழாவிற்கு தலைமை தாங்க வேண்டியவரோ கடைசி நேரத்தில் காலை வாரி விட்டார். உடனடியாக இன்னொரு தலைவரை தேடியாக வேண்டும். திரு. எஸ். டி. சிவநாயகம் அப்போது அங்கு வந்து கொண்டிருந்தார்: அவரை அணுகி தலைமை தாங்க வேண்டினேன். அவரும் பயந்து பின் வாங்கினர்.

நான் திரு. வன்னியசிங்கம் இருக்குமிடத்தை நெருங்கினேன். திரு. வன்னியசிங்கம், விழாவின் நிகழ்ச்சி நிரலை கையில் வைத்துக் கொண்டு குறிப்பெடுத்துக் கொண்டிருந்தார்.

நான் அருகில் நெருங்கினேன். ''அய்யா!'' என்றேன். ''தம்பி'' என்றார். எனக்கு உற்சாகமும் மகிழ்ச்சியும் ஒருங்கே உடலில் பாய்ந்தது: ''தாங்கள் யாழ்ப்பாணத்திலிருந்து தானே வருகிறீர்கள்'' என்றேன். ''ஆம் தம்பி'' என்றார் ''அய்யா, இன்று தலைமை தாங்க ஒப்புக்கொண்டவர் வரவில்லை, தாங்கள் தலைமை தாங்கவேண்டும்'' என்றேன். சிறிது கூட யோசிக்காமல் பெருந்தன்மையுடன் அதற்கு என்ன என்றார். என் மானம் பிழைத்தது. மனம் குளிர்ந்தது.

இந் நிகழ்ச்சியை என்னால் இன்றும் மறக்கமுடியவில்லை.

# தனித் தலைவன்

சிங்கத் தமிழ் நடையைச் சிறந்த தனி நடையை
தங்கத் தமிழ்தனக்குத் தந்ததமிழ்த் தலைவன்
எங்கள் தமிழ்த்தாயை எண்ணியே நாள்முழுதும்
தங்கள் திறமையினைத் தரணிக் கெடுத்துரைத்து
சிங்கத் தமிழினத்தின் சிறந்தபெரும்புகழை
எங்கும் பரப்பிய எம் ஏந்தல் பெருவேந்தன்
வங்கக் கடலோரம் வாகாய் உறங்குகின்ற
தங்கத் தமிழ்த்தலைவன் தரணிபுகழ் தார்வேந்தன்
எங்கள் அண்ணனல்லால் எவருமே இல்லையடா;

—துரையன்.

★

# அண்ணு சாகவில்லை!

கன்னித் தமிழ்நாட்டுக் காஞ்சி எழில்வேந்தன்
தன்மானம் மிக்க தமிழப் பெரும் அறிஞன்!
முன்னாளில் ஊன்றி முகிழ்ந்த கொடும்சாதி
வன்மைகளை அறிவு வாளால் அதம்செய்து
பாசம் மிகுந்த பரம்பரையைத் தோற்றுவித்தோன்!

நேசச் சமூக நெருக்கம் விழைத்து அதால்
வாச மனைய வளமார் சமுதாயம்
ஓங்கி வளர்ந்து அரசோச்சக் காட்டியவன்!

இத்தனையும் செட்டாய் இயற்றி... இனும் ஏற்ற
இட்டங்கள் தீட்டிச் செயலாற்றும் போதினிலே
பொல்லாத காலன் போட்ட வலைக்குள்ளே
மல்லாடிச் சோர்ந்து மடிந்த பெருமனிதன்
அண்ணு!... உயர்ந்த அறிஞன்... இழிநிலைகள்
துண்டாக்கி தமிழைத் துலக்கி செப்பம்செய்த
நல்லசிற்பி!... தமிழர் நாட்டைப் புதுப்பித்த
வல்ல செயலாளன்!... மாண்டும் இரண்டாண்டு
ஓடிற்று?... அந்த உயர்ந்த அறிவண்ணன்
கூடியிருந்து கொள்கை விளக்கியது
நேற்றே போலன்றோ நினைவிற் புரள்கிறது!
ஆமாம்...
அறிஞன் அமரத்துவம் பெற்ற
நாளிற் தானன்றோ நாற்பதுபேர் மாண்டார்கள்!

ஆரும் இறக்க அவர்க்காய் அனேகம் பேர்
பேருடலை மாய்த்த பெருமை இங்கெங்கேனும்
நடந்ததுவுமில்லை;—இனியும் நடக்காது!
ஆமாம்... அறிஞர் அண்ணு இறந்ததற்கே
தாமாக நாற்பதுபேர் தன்னுயிரை மாய்த்தார்கள்!
அண்ணன் இறந்தும் அழியவில்லை!... ஏனென்றால்
இன்றைக்கும் அண்ணு இறைத்த கருத்துகளை
எங்கும் நிறைந்து இளைய சமூகத்தைத்
தங்கப் புது வழியில் தனி நடத்திச் செல்கிறது;
ஆகையினால் அண்ணு நிசமாகச் சாகவில்லை!

பூப்போன்ற அண்ணர் புதுமைக் கருத்துக்களைச்
சாப்பிட்டு... இளைய தம்பிமார்கள் இன்று
வெற்றிக்கு மேலே வெற்றி சமைக்கின்றார்!
ஆகையினால் அண்ணு சாகவில்லை நிச்சயமாய்!

போமப்பா!... அந்தப் புனிதன் பெருமறிஞன்
ஆறிவிட்டானென்றேன் வீணே அரற்றுகிறாய்
சாகவில்லை அந்தத் தமிழன்! எல்லோர் நெஞ்சும்
மிக்க நிறைந்து வெற்றிவழி காட்டுகிறான்!

எக்காலும் அண்ணு இறைத்த புதுமலர்கள்
செத்தழியா... வாழ்க்கை சிறக்க வழிகாட்டும்
நிச்சயமாய்...
அண்ணன் நினைவு தமிழ் நெஞ்சில்
பக்குவமாய் வாழும் படர்ந்து!

—''கல்முனைப் பூபால்''

★

# சிறை வைத்தேன்!

இன்னல் தமிழுக்கு வந்தால்—அதை
இப்பொழு தேகளைந் தெறிந்திட வேண்டும்!
கன்னித் தமிழெங்கள் தெய்வம்''—எனக்
கர்ச்சித் தெழுந்தவன் எங்களின் அண்ணன்!
தன்னுயிர் போகினு மஞ்சான்—தமிழ்த்
தாய்க்குத் தலைமக னுகவந் தோனை,
என்னுளந் தன்னிலே பூட்டி—சிறை
வைத்துவிட் டேன்; இனி விட்டிட மாட்டேன்!

சாதிக் கொடுமையைச் சாடி—நன்மை
சாற்றுநல் நூல்களை ஏற்றமாய் வைத்து
வேதிய ராயினும் ஒன்றே—இங்கு
வேறெவ ராயினும் ஒன்றெனக் கூறி
ஓதி யுணர்த்தினன் அண்ணன்—இந்த
உலகினிற் தமிழினை ஓங்கவைத் தோனை,
தீதற நெஞ்சினுள் பூட்டி—சிறை
வைத்துவிட் டேன்; இனி விட்டிட மாட்டேன்!

மடைமைத் தனங்களை நீக்கி—இந்த
மாநில மாந்தர்கள் வாழ்வதற் கென்று
கடமையும், கண்ணியத் தோடு,—நல்ல
கட்டுப்பாட் டையுமே சேர்த்துவைத் தோனை,
கடவுள் உலகினுக் கொன்றே—எனக்
கருதி மொழிந்து புகழடைந் தோனை,
திடமுறு நெஞ்சினுள் பூட்டி—சிறை
வைத்துவிட் டேன்; இனி விட்டிட மாட்டேன்!

சொல்லின் செல்வரொடு வாதம்—செய்து
சொற்றிறன் தன்னிலோர் பேரெடுத் தோனை
செல்லும் வழியிற் புதுமை—காட்டிச்
சென்றத னலொரு பேரெடுத் தோனை,
அல்லல் அடைந்திட்ட போதும்—சிறைக்(கு)
அஞ்சாநெஞ் சத்தினுல் பேரெடுத் தோனை,
நல்லுளந் தன்னிலே பூட்டி—சிறை
வைத்துவிட் டேன; இனி விட்டிட மாட்டேன்!

—கொற்றை பி. கிருஷ்ணனந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தமிழன்னைக்காக இரத்தம் சிந்திய இந்த உடலைத் தழுவும் பாக்கியம் பெற்றேன்'

## வன்னியனாரைக் கட்டியணைத்தபடி இப்படிக் கூறினார் பேரறிஞர் அண்ணா!

## இரு தலைவர்களும் சந்தித்து அளவளாவிய இதயம் விட்டகலாத உளம்நிறை காட்சி!

**15, 16, வருடங்களுக்கு முன் நடைபெற்ற நிகழ்ச்சி. தமிழரசு, திராவிடமுன்னேற்றக்கழகம் என்ற இயக்கங்களின் ஆரம்பகாலம். பிரபுத்துவ மோகத் தமிழர்க்கும் இலட்சியத் தமிழர்க்கும் இடையே நடந்த போராட்டத்தில் பொது மக்கள் திணறிய காலம். பணக்குவியல், கௌரவம் என்பன வற்றால் அடிமைத்தனத்தை மூடி வெள்ளை கட்டி விட்டுபதவிப்பஞ்சணை ஊஞ்சலில்சுகங்கண்ட பிரபுத்து வக்கும்பலை வேரோடுசாய்த்துத் தமிழர் விடுதலைக்காகத் தம்மைத் தியாகஞ் செய்த இரு நாட்டுத் தலைவர்களின் சந்திப்பைக் குறிப்பிடுவதே இக்கட்டுரை.**

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சிற்பி; வன்னியர் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் சிற்பி. ஈ. வே. ராமசாமி நாயக்கரைத் தலைவராக கொண்ட திராவிட கழகத்திலிருந்து பிரிந்தது திராவிடமுன்னேற்றக் கழகம்; கா. கா. பொன்னம்பலம் அவர்களைத் தலைவராகக் கொண்ட தமிழ்க் காங்கிரசிலிருந்து பிரிந்தது தமிழரசுக்கட்சி. அண்ணா சர்வகலாசாலைப்பட்டதாரி; வன்னியரும் சர்வகலாசாலை பட்டதாரி. வன்னியர் அறவாதியாகப் பட்டம் பெற்றதுபோல, அண்ணாவும் தமது குற்றச் சாட்டுக்களை எதிர்த்து நீதிமன்றத்தில் தானே வாதாடி வெற்றிகள் கண்டதால் அறவாதியாகவும் விளங்கினர்:

### பெண் மோகமும் பொன் மோகமும்

"தமிழ் நாடு உலகோடு சமமாக நின்று—தலைதூக்கி நிலைபெற்று வளமாக வேண்டும்" என்ற குயிலன் பாட்டுக்கு ஏற்ப தமிழரை அடிமை வாழ்விலிருந்து விடுவித்து, வீரசுதந்திர இனமாக முன்னேறச் செய்வதற்கு இருவரும் தமது உடல், பொருள், ஆவி அத்தனையையும் அர்ப்பணித்தனர். திராவிட முன்னேற்றக் கழகம் பெண் மோக நிலை காரணமாகப் பிரிந்தது: தமிழரசுக்கட்சி பொன் மோகநிலை காரணமாகப் பிரிந்தது. தாம் பிரிவதற்குக் காரணமான பெண்ணையும், பொன்னையும் விடுத்து மண்ணைக்காக்க வீர சபதம் எடுத்தன இரு இயக்கங்களும்.

வற்றுறை நவரத்தினம் என்போர் இலட்சியத் தளபதிகளாக அமைந்தனர்.

காலப் போக்கில் ஈ. வி. கே. சம்பத், கண்ணதாசன் போன்றோர் எவ்வாறுகழகத்தில் துரோகிகளாக மாறினார்களோ, அவ்வாறே தமிழரசுக் கட்சியிலும் துரோகிகள் சிலர் தோன்றி வெளியேறினர். தமிழரசுக்கட்சியின் ஊர்வலங்களில் தன்னந் தனியாக மங்கையற்கரசி அமிர்தலிங்கம் கொடிபிடித்த கரத்துடன், வானைப் பிளக்கும் சுலோக கோஷத்துடன் எவ்வாறு வருவாரோ, அவ்வாறே தி. மு. க. ஊர்வலங்களில் அலமேலு அப்பாத்துரை அவர்கள் தன்னந் தனியாகக் கொடி தாங்கிச் சுலோகங்களை முழக்கியவாறு ஊர்வலத்தில் வருவார்.

இராசபூபதி அருணாசலம் அவர்கள் எவ்வாறு தமிழரசு மேடைகளில்தோன்றி மறைவாரோ, அவ்வாறே டாக்டர் சத்தியவாணி முத்து அவர்களும் கழக மேடைகளில்தோன்றுவார்.

இலங்கைத் தமிழர்களின் தொண்டைக்குள் சிங்களத்தை திணிக்க எவ்வாறு இலங்கையரசு முயன்றதோ—அவ்வாறே இந்தியத் தமிழர்களின் தொண்டைக்குள் இந்தியைத் திணிக்க இந்திய அரசு முனைந்தது. சிங்களால் என்றுமே முடியாததாகும்.

ஆழ்ந்த சிந்தனையும், பொறுமையும் சுய நம்பிக்கையுமுடைய வீர புருஷர்களால் மட்டுமே அடிமைப்பட்ட ஓரினத்தைச் சுதந்திர இனமாக ஆக்க உழைக்க முடியும் என்பது வரலாறு காட்டும் உண்மையாகும். இந்த அடிப்படையிலேயே இவ்விரு தியாகமாமலைகளும் தமிழரின் உரிமைப் போரின் பொறுப்பினைக் கையேற்ற நாள்முதல் காலன் கைப்படும் வரை மெய் வருத்தம் பாராது, பசி நோக்காது, அஞ்சாது, தமக்கு வரும் தீங்கினைச் சிந்தியாது, ஆட்சியாளரினதும், அடிவருடிகளினதும் துன்பங்களைத் தாங்கி, கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டினுள் இயக்க வீரர்களையும், மக்களையும் கட்டுப்படுத்தி, மானமே உயிராகப் போற்றி இலட்சியத்துக்கு உழைத்தனர்.

### மேடைப்பேச்சு

எதிர்க் கட்சியினரைத் தாக்கும் போது "மாற்றான் வீட்டு மல்லிகை என்பதாலே அது வாசனை அற்றதா" என அண்ணா அவர்கள் மேடையிலே கூறுவதனையும், "நக்கும் நாய்க்குச் செக்கென்ன சிவலிங்கமென்ன" என வன்னியர் மேடையிலே கூறுவதனையும் சிந்திப்போர் மேடைப் பேச்சுக்களில் அவ்விருவரும் தமக்குத் தாமே நிகராவர் என்பதைக் கண்டறிவர்.

"இடுக்கண் வருங்கால் நகுக" என்ற வள்ளுவன் வாக்கைப் பொன் மொழியாகக் கொண்டு செயலாற்றிய இக் கடமை வீரரைப் போல் தமிழர்களுக்குள் யாம் யாரையும் கண்டிலோம். ஆட்சியாளரது இன அழிவுச் சட்டங்கள் தமிழினத்தைக் கொடுமையாக பாதிப்பதென உணர்ந்த நேரங்களில் வன்னியனார் மேடையில் நின்று அச்சட்டத்தை விளக்கி அரசின் நயவஞ்சனையைப் பொது மக்களுக்கு உணரவைக்கும் நேரத்தில் அலாதிப் புன்முறுவல் பூப்பதைப் போல அண்ணா அவர்களும் கோர துன்பநிலை அடைந்த நேரங்களில் அவரது இதயம் தழுவிப் புறப்படும் புன்னகையை எண்ணும்போது இருதலைவர்களிடமும் ஒன்றுபட்ட பல குணங்கள் சொல்லி வைத்துத்தான் தோன்றினவோ யாரறிவர்?

### சந்தித்தகாட்சி

இவ்வாறு இயக்கத்தாலும், இலட்சியத்தாலும், பணியாலும் இணையப்பெற்ற இரு தலைவர்களும் ஒருவரை ஒருவர் சந்தித்து அளவளாவிய காட்சி சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததாகும். 1957ம் ஆண்டின் முற்பகுதி—வன்னியசிங்கம் அவர்களது மாமியார் திருமதி சிறீநிவாசன் அவர்கள் நோய் காரணமாக வேலூர் வைத்திய மனையில் அனுமதிக்கப் பெற்றிருந்தார். மாமியாரது சிகிச்சைக்காக வன்னியனார் அவர்கள் வேலூரில் தங்கியிருந்தார்.

அக்காலத்தே இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணியினர் தமிழரசு மலரைத் தமிழ் நாட்டில் அச்சேற்றிக் கொண்டிருந்தனர். மலரின் மேற்பார்வைக்காக யான் சென்னையில் இருந்ததால் ஒரு நாள் வேலூர் மருத்துவ மனைக்கு திருமதி சிறீநிவாசன் அவர்களைப் பார்க்கச் சென்றேன். அப்பொழுது வன்னியனார் 'மாமியார் குணமடைந்து வருகிறார். சென்னையில் உள்ள எனது சுற்றத்தவர்கள் இருவர் மாமியுடன் நிற்கிறார்கள். பூரண சுகமடைந்ததும் யான் வந்து அழைத்துச் செல்லலாம். ஆதலால் யான்

(11-ம் பக்கம் பார்க்க)

## வித்துவான் வ. கந்தையா

தி. மு. கழகம் 1949-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17-ந் திகதி உதயமானது. தமிழரசுக்கட்சியும் அதே ஆண்டு அதே மாதம் 27-ந் திகதி யாழ்ப்பாணம்கைலாய பிள்ளையார் கோவில் வீதியில் முதலாவது பொதுக் கூட்ட ஆரம்பத்துடன் தோன்றியது: தி. மு. கழகத்தினருக்கு ஈ. வே. ரா. அவர்கள் "கண்ணீர்த் துளிகள்" என்ற பட்டத்தைச் சூட்டியது போல, தமிழரசுக்கட்சிக்கு கா. கா. பொன்னம்பலம் அவர்கள் 'சமட்டிகள்' என்ற பட்டத்தைச் சூட்டினார்.

### ஒற்றுமை

அண்ணாவிற்கு இரா—நெடுஞ்செழியன், மு. கருணாநிதி, ஈ. வீ. கே. சம்பத், கண்ணதாசன், என். வி. நடராசன் போன்றோர் எவ்வாறு இலட்சிய தளபதிகளாக அமைந்தனரோ, அவ்வாறே வன்னியருக்கும் திருமலை வரோதயம், வைத்திய கலாநிதி நாகநாதன், தளபதி அமிர்தலிங்கம், மட்டுநகர் இராசதுரை, பட்டிருப்பு இராசமாணிக்கம், ஊர்கா

எதிர்ப்பால் நமது நாட்டில் ஏற்பட்ட அட்டூழியங்களைப் போலவே இந்தி எதிர்ப்பால் பல கொடிய அட்டூழியங்கள் தமிழ் நாட்டில் நடைபெற்றன. இத்தனைக்கும் அஞ்சாது இலட்சியப் பாதையிலே மக்களை வழிநடாத்திச் சென்ற இரு பெருந் தலைவர்களையும் தமிழ் மக்கள் இன்று இழந்துவிட்டனர்.

### வரலாற்று உண்மை

பனிப் பாறைகள் நிறைந்து பெருஞ்சுழி மலிந்து, வானை முட்டும் அலைகளையுடைய ஆழியில் பாதுகாப்பாகக் கப்பலைச் செலுத்திக் கரை காண்பது எத்துணை கர்ணகடூரமோ அத்துணைய தான ஆட்சியாளரின் அடக்கு முறை, அடிவருடிகளின் துரோகம், கட்சிக்குள்ளிருந்து காட்டிக்கொடுப்பது, காலைவாரிவிடுவது, நம்பிக்கைத் துரோகம் இழைப்பது, பதவிக் காய்ச்சல் முதலிய இத்துணை துன்பங்களையுந் தாங்கி நம்பிய மக்களைச் சுதந்திர பாட்டையிலே அழைத்துச் செல்வதென்பது சர்வ சாதாரணமானவர்க



காலி முகத்திடலில் கன்னித் தமிழ் காத்திட எம் தமிழர் கோமான் அறப்போர் புரிந்த காட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அண்ணாவும் வன்னியரும் இன்னும் மடியவில்லை!



சில இலட்சியங்களை நிறை வேற்றுவதற்காகத் தலைவர்கள் சிலர் பிறக்கிறார்கள். அந்த இலட்சியங்களை நிறை வேற்ற முன் அவர்கள் மடிந்து போகலாம். அவர்கள் எந்த இலட்சியங்களை நிறை வேற்ற வந்தார்களோ அந்த இலட்சியங்கள் அவர்கள் மறைந்த பின்னரும் நிறை வேற்றப்படாமல் இருக்கலாம். ஆனால் அந்த இலட்சியங்களை அவர்கள் உருவாக்கிய சமுதாயம் நிறை வேற்றி வெற்றி காண்கின்றவரை அவர்கள் அச்சமுதாயத்தின் தலைவர்களாகவே இருப்பார்கள். அண்ணாவின் இறுதி இலட்சியமான விடுதலை பெற்ற தனித் தமிழகம் மலரும் வரை அண்ணா தலைவராகவே இருப்பார். வன்னியரின தமிழ் இலங்கைத் தன்னாட்சி மலரும் வரை வன்னியர் தலைவராகவே இருப்பார்.

—எழில் தமிழ் ஆளர் இராசதுரை

# வன்னியனாரின் தியாக வாழ்க்கை!

யாழ்ப்பாணத்திலே தெல்லிப்பழையிலே உயர் குடியிலே தமிழறிவு மிக்க வழக்கறிஞர் குமாரசாமி அவர்களின் அருந்தவப் புதல்வனாக அறுபது ஆண்டுகட்கு முன் திரு. வன்னியசிங்கம் தோன்றினார். உயரிய குலத்து உதித்த போதிலும், தீண்டாமையை ஒழித்தற்குப் பெரிதும் முயன்று தாழ்த்தப்பட்டோருடன் சமபந்தியிலிருந்து போசனம் செய்து தம் மேம்பாடுடைய கொள்கையை நாட்டிய செம்மலை யாம் போற்றுவோமாக.

அவர் யாழ்ப்பாண இந்துக் கல்லூரியிலும் கொழும்பு பல்கலைக் கல்லூரியிலும் பயின்று பி. ஏ. பட்டம் பெற்றபின் சட்டக் கல்லூரியில் கற்று வழக்குரைஞராயினார். இளைஞனாக இருந்த போதிலும் அவர் யாழ்ப்பாண நீதிமன்றத்தில் வழக்குரைத்து வாழ்க்கையில் பொருளீட்டத் தொடங்கினார். இம்மை வாழ்க்கைக்கு வேண்டிய பொருளைத் தேடுமுன் கி. பி. 1947ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் தமிழர் மகா சபையின் வேட்பாளராகக் கோப்பாய்த் தொகுதிக்குப் போட்டியிட்டு வெற்றி பெற்றுப் பாராளுமன்றத்தின் உறுப்பினராகித் தேச சேவை செய்ய ஆரம்பித்தார்.

அரசியற் கொள்கை

மலை நாட்டுத் தமிழ் மக்களின் வாக்குரிமையை ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் பறித்தகாலை, மந்திரி பொன்னம்பலம் அவர்களும் உடந்தையாக இருந்தனராக, திரு செல்வநாயகமும், திரு. வன்னியசிங்கமும் தமிழர் மகா சபையை விட்டுப் பிரிந்து தமிழரசுக் கட்சியை நிலைநாட்ட முயன்றனர்.

பொன்னம்பலம் கட்சியினர் சிங்களம் கற்றுச் சிங்களவரசில் எழுத்தாளராகவும் கணக்கராவும் சேவித்து வாழ்க்கைப் பொருளீட்டலே தமிழருக்கு நன்மை பயக்குமென விளம்பினர். பொருள் வருவாயைக் கொடுக்கும் தேயிலைத் தோட்டங்களும் ரப்பர்த் தோட்டங்களும் சிங்கள நாடுகளில் உளவாகையால் சிங்களரே யாண்டும் அரசு செலுத்தும் வல்லமையுடையவர்கள் எனவும் தமிழர் சிங்கள நாடுகளில் வணிகஞ் செய்தும் சேவை செய்தும் பசிப்பிணியைத் தீர்க்கலாமே ஒழிய வேறு யாது செய்யலாம் என மொழிந்தனர். மேலும் 60 இலட்சம் சிங்களருக்கு எதிராகப் பதினைந்து இலட்சம் தமிழர் போராடிச் சுயாதீனம் பெறவியலாதெனவும் பகர்ந்தனர்.

மேற்கூறிய கொள்கை தோல்வி மனப்பான்மையை காட்டுகின்றமையால் அடாதெனத் தமிழரசுக்காரர் பிரசாரஞ் செய்தனர். என்னை! தமிழரும் சிங்களரும் இருவேறு வாழ்க்கை இலட்சியங்களும் நாகரிகங்களும் உடையவராகையாலும் இருவேறு மொழிகள் பேசுபவராகையாலும் இருவேறு நாடுகளை உடையவராகையாலும் இரு சாதியினரும் கலந்து ஒரு சாதியினராகார் எனத் தமிழரசுக் கட்சியினர் வற்புறுத்தினர்.

இலங்கையில் பண்டு தொட்டு வட கீழ்ப் பாகங்களில் தமிழரும் தென்மேற் பாகங்களில் சிங்களரும் அரசு செலுத்தி வந்தனர். அன்றியும் சிங்களர் தமிழருக்கு உரிமைகளை அளிக்க மறுக்கின்றார்களாகையால் தமிழரசு சிங்களவரசு என இருவேறு அரசுகளை ஒரு இணையரசாக அமைத்துப் பிணக்குகளைத் தீர்த்தலே சிறந்த அரசியல் முறையாகும் எனக் கிளர்ந்தனர். இங்ஙனமே சுவிசர்தேயம், ரசியா, இந்தியா. கனடா முதலிய பல தேயங்களில் பல இனங்கள் சேர்ந்து கூட்டாட்சியை நடாத்துகின்றனர். தமிழர் தம் நிலவுரிமைக்காகவும் மொழியுரிமைக்காகவும் போராட வேண்டும் எனத் தமிழரசுக் கட்சியினர் பிரசாரஞ் செய்தனர். இப்பிரசாரம் செய்வதில் திரு. வன்னியசிங்கம் ஒப்பாரும் மிக்காருமின்றித் துலங்கினர்.

முதல் மாநாடு

தேவாரப் பாடல் பெற்ற புண்ணிய பூமியாகிய திருகோணமலையில் 1951-ம் ஆண்டு சித்திரைத் திங்கள் முதல் நாள் தமிழரசுக்கட்சியினர் தம் கொள்கைகளை மகாநாடு கூடி ஆராய்ந்தனர். 1952-ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் தமிழரசுக்கட்சி அபேட்சகருள் திரு. திரு. வன்னியசிங்கம், திரு. இராசவரோதயம் என்னும் இருவரே தெரியப்பட்டனர். திரு. வன்னியசிங்கம் மனம் தளராமல் கட்சியின் தலைமை தாங்கிப் பெருந் தொண்டாற்றினர்.

அரசியலார் தனிச்சிங்கள மொழியை அரசகரும மொழியாக்க முயன்றனராக, 1956 ஆண்டுப்பொதுத் தேர்தலில் தமிழரசுக் கட்சிக்கு வட கீழ் மாகாணங்களில் நல்ல ஆதரவு கிடைத்தது. திரு. வன்னிய சிங்கம் தமிழ் மொழியும் அரசகரும மொழியாக இருக்கவேண்டுமெனப் பாராளுமன்றத்தில் இடித்துரைத்தனர். பேச்சளவில் மாத்திரம் சேவை செய்யும் அரசியல் வாதி அல்லர் திரு. வன்னியசிங்கம்.

திருவாளர் வன்னியசிங்கம் காலிமுக சத்தியாக்கிரத்தில் பங்குபெற்றுச் சிங்களக் குண்டர்களால் பலவாறு வருத்தப்பட்டனர். இச்சத்தியாக்கிரகத்தின் பயனாகத் தமிழ் நாட்டில் பெருங் கிளர்ச்சி உண்டாயிற்று.

1956ல் தமிழ் மக்கள் 'அணங்கே விலங்கே கள்வர் தம் இறையெனப் பிணங்கல் சாலா அச்சம் நான்கினையும்' ஒழித்துத் திருமலைக்குக்கால் நடையில் யாத்திரை செய்தனர். திருமலையில் தமிழரசுக்கொடிகள் எங்கும் நிறைந்து இருந்து தொண்டர்களை வரவேற்றன எனலாம். தலைவர் வன்னிய சிங்கத்தை அழைத்துச்சென்றுழி மக்கள் மலர்மாரி பொழிந்தனர். அம்மாபெருஞ் சபையில் தலைவருடைய வீரமும் அரசியல் அறிவும் துலங்கிய என்க.

**த. இராமநாதபிள்ளை பீ. ஏ. (இலண்டன்)**

பேச்சு வன்மை:

பிரசாரக் கூட்டங்களில் வினா எழுப்புவோர்க்கு விடையளித்தல் திரு. வன்னியசிங்கத்தின் பொறுப்பாயிற்று. அவர் வினாக்கேட்போருடைய போலி நியாயங்களைத் தகர்த்தெறியும் ஆற்றல் மிக்குடையார் என்பது ஒருதலை. எதிர்க்கட்சியினரை அவர் அதிகம் தாக்கிப்பேசினார் எனச் சிலர் சொல்வர். பதிலுக்குப் பதில் கொடுக்கும் போது அவர் மிக்க காரசாரமாகத்தான் பேசினர். அப்பொழுது அவருடைய சொல்லின் வன்மையும் புத்தி நுட்பமும் இனிமை பயப்பவையாகவும் சுவையுள்ளவையாகவும் இருக்கும்.

ஒரு முறை வினா எழுப்பிய ஒருவர் தாக்குதலைச்சகிக்கவியலாது சினந்தனர். அப்பொழுது திரு. வன்னிய சிங்கம் வெஞ்சொல் தவிர்த்து 'சினக்கவேண்டாம்! குல்லாப் பொருந்து மாயின்போட்டுக் கொள்ளும்' எனக்கிளந்து அவரை அடக்கிவிட்டனர்.

தாக்கவேண்டிய பொழுது தாக்கவேண்டிய அளவு தாக்கி வாக்குச் சாதுரியத்துடனேயே பேசினர் எனலாம்.

ஒரு சமயம் பருத்தித்துறைப்பொன் மணலிலே தொண்டர் படை திரட்டப் பேசியபொழுது தொண்டர் பெருந்தொகையினராகச் சேர்தற்கு விரைந்தனராக, திரு. வன்னிய சிங்கம் "என்னை! மேடையில் ஒரு பக்கத்தில் பெரிய ஆரவாரமாக இருக்கிறது. தொண்டர்கள் பெருந்தொகையினராக வருகிறார்கள்" எனக் களிப்புடன் பேசி யாவரையும் தொண்டர் படையில் சேரும்படி தூண்டினர்.

மேலும், கொழும்பிலே தமிழர் ஐக்கிய முன்னணி ஒன்றை ஆக்கவேண்டுமெனப் பல கட்சிகளும் ஒருங்கு கூடிய பொழுது, தலைவர்கள் தம்முள் வேற்றுமைப்பட்டு ஒருவரை ஒருவர் தாக்கியதை திரு. வன்னிய சிங்கம் அழகாக வருணித்துப் பேசுவர். என்னை! ஒரு தலைவர் தன் வலத்திலும் ஒருவர் இடத்திலும் இருந்தனர் எனவும் நாய்கள் இரண்டு கால்களில் எழுந்து ஒன்றை ஒன்று கௌவ முயல்வது போலே ஒரு தலைவர் ஒரு தலைவரை நீதான் துரோகி நீதான் துரோகி' எனக் கிளந்து கடிக்கப் பார்த்தனர் எனவும் அவர்களை அவைத் தலைவர் ஒருவாறு அமரச்செய்து தன்னைக்காத்தனர் எனவும் நகைச்சுவை ததும்பப்பேசினர். காரிய ஆலோசனைச்சபையின் கூட்டங்களிலும் திரு. வன்னிய சிங்கம் நகைச்சுவையுடன் பேசுதல் வழக்கம்.

அறப்போர்.

தமிழ்நாடுகளில் அமைச்சர்களை வரவேற்காது கறுப்புக்கொடி பிடித்து எதிர்த்தல் தமிழரசுக்கட்சியின் தீர்மானமாயிற்று. மன்னார்ப் பகுதியில் தமிழரசுக்கட்சிக்கு ஆதரவில்லை என எண்ணி இனவெறி பிடித்த அமைச்சர் சிலர் பெரிய ஆரவாரத்தோடு மன்னாரில் வந்து இறங்கினர். மன்னார் மக்கள் வன்னியரின் தலைமையில் கறுப்புக்கொடி பிடித்து அமைச்சர்களை ஒட்டிக்கலைத்தனர். அப்பொழுது சாத்துவிக முறையாகப் பெருமிதத்தோடு தலைவர் வன்னிய சிங்கம் அமைச்சர்களை மிரட்டிடினர் என்பதைக்கேட்டுத் மக்கள் தமிழ் பெருமகிழ்ச்சியடைந்தனர் அன்றோ!

சட்ட மறுப்பைத் தொடங்கி மக்களுக்கு இடர் விளைப்பதிலும் பிரதமரோடு கலந்துபேசி உரிமைகள் சிலவற்றையேனும் பெறலாமென எண்ணினர் வன்னிய சிங்கம் செல்வநாயகம் முதலியோர்:

பண்டார நாயக்கரைக் கண்டு பேசி அவர்கள் ஓர் ஒப்பந்தம் செய்தனர், அவ்வொப்பந்தத்தில் தமிழ் நாடென ஒன்று உண்டெனவும் அவண் சிங்களரை அரசாங்கம் குடியேற்றமாட்டாதெனவும் தமிழே அரசகரும மொழியாகுமெனவும் பிரதமர் வாக்குக் கொடுத்தனர்.

தமிழ் மக்கள் பல கட்சிகளாகப் பிரிந்து ஒற்றுமையின்றி இருக்கும் நிலையில் பெரிய சட்டமறுப்பு இயக்கத்தைத் தொடங்குதல் கூடாதென்னும் அரசியல் ஞானம் போற்றத்தக்கதே.

இனித் தலைவர் வன்னிய சிங்கம் வடவேங்கடம் தென் குமரியாயிடைத் தமிழ் கூறு நல்லுலகமெங்கும் சென்று ஆங்குள்ள பல கட்சியினருக்கும் இலங்கைத் தமிழர்படும் பாட்டை விரித்துரைத்துப் பெரும் ஆதரவு பெற்றுத் திரும்பினர்.

தமிழ் மக்களின் கிளர்ச்சி வேகத்தைத் திரு. பண்டார் நாயக்கர் கண்டு தமிழ் மொழியும் ஓரளவுக்கு ஆட்சி மொழியாகுமென ஒரு சட்

(11ம் பக்கம் பார்க்க)

## வன்னியர், அண்ணா மீது ஆணை........!



அறிஞர் அண்ணா, அமரர் வன்னியசிங்கம் — இருவரும் தமிழினத்தின் வழிகாட்டிகள்—திசையறி கருவிகள்!! அறியாமையிலும், அடிமைத்தனத்திலும் சிக்குண்டு விடுதலை தவறிக்கெட்டு தாழ்ந்து கிடந்த தமிழினத்துக்கு எழுச்சியூட்டி, விடுதலைப் பாதையில் நடை போடவைத்த தியாகச் செம்மல்கள்.

இந்தி ஏகாதிபத்தியத்தை தமிழகத்துள் நுழைய விடாது தடுத்து நிறுத்தி தமிழைக் காத்தவர் அண்ணா; சிங்கள ஏகாதிபத்தியம், ஈழத் தமிழகத்துள் நுழைந்து விடாதபடி எதிர்த்து போரிட்டு அதிலே தனது உயிரை பலியாக்கியவர் எமது வன்னியனார்.

இந்த இருவர் வகித்த இடங்களும் யாராலும் ஈடு செய்ய முடியாதவை. வன்னியரும், அண்ணாவும் தொட்ட பணி பூரணப்படுமுன்னர் — அதாவது தமிழர்களுக்கென்றோர் தனி அரசியலமைப்பு உருவாகுவதற்கு முன்னர்— இப்பெருந் தலைவர்களை தமிழினம் இழந்தது தமிழினத்தின் மிகப்பெரிய துரதிருஷ்டமே! இவர்கள் விட்டுச்சென்ற பணியைத் தொடர்ந்து செய்து விடுதலை பெற்ற தமிழகத்தை நம் வாழ்நாளிலேயே காண சபதம் எடுப்போம்!

இந்த இருபெரும் தமிழ் தெய்வங்களும் காட்டிய தியாகப் பாதையில் செல்ல தமிழ் இளைஞர்கள் உறுதியெடுப்பார்களாக.

அன்பன், அ. அமிர்தலிங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நினைவில் நிற்பவை

'ஈடுண்டறியாத' நாகநாதனை சின்னுட்களுக்குள் முத்திரைச் சந்தை மைதானத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கண்டேன். கட்டான உடலுடன் செட்டாக மேடைமீதமர்ந்திருந்தார். தில்லைவெளியினிற் சேர்ந்துவிட்ட திருப்தி எனக்கு. 'இந்தப் பெரிய' பொன்னம்பலத்தை இவரா வது தோற்கடிப்பதாவது என்றொரு வக்கணையான ஐயப்பாட்டை வாரியிறைத்திருந்தன பல சக்திகள்—ஊர்க்குருவிகள், தெருத் திண்ணைவிமர்சகர்கள், 'தேசிய'த் தினசரிகள் என்பன. 'தேசிய'த் தினசரிகளின் பணி அன்று கூடத் திவ்வியமானதல்ல; திருட்டும் புரட்டும் நிறைந்தது தான்.

### தர்ம-அதர்ம யுத்தம்:

முத்திரைச் சந்தைமேடை மீது டொக்டரைப் பார்க்கிறேன்—அட்ட திக்குகளும் நடு நடுங்க வைக்கும் அசகாய சூரனுக. பிரச்சார சாதனங்கள் பலவற்ருல் பிரதிநிதித்துவப்படுத்தப் பட்ட திரு. பொன்னம்பலம்; விளம்பர சாதனங்களின் பரபரப்பும் பளபளப்புமின்றி திரு. பொன்னம்பலத்தின்போட்டி வேட்பாளராக மேடையிலே வீற்றிருக்கின்ற டொக்டர். அன்னுரைச் சுற்றியிருந்த அடக்கமான சூழல். திரு. பொன்னம்பலத்தைச் சுற்றியெழுப்பப்பட்டிருந்த அலங்காரம், ஆரவாரம், அட்டகாசம்.

ஏனே என் மனத்தில் அப்போது நான் படித்திருந்த கிருஷ்ண பரமாத்மா—கம்சன் பற்றிய கதை நினைவுக்கு வந்தது. தர்மத்திற்கும் அதர்மத்திற்குமிடையே கோர யுத்தமெனவும் தர்மத்தின் தார்மீகபலம் அதிகமாகையால் மிகவும் அடக்கமாக வீற்றிருக்கின்றது என்றும் எண்ணிக் கொண்டேன்.

### பிள்ளைத் தமிழ்:

நொத்தாரிசு திரு. கி. துரைசிங்கம் தலைமையில் அல்லது அவரது ஈடுபாட்டுடன் கூட்டம் நடந்ததாக நினைவு; பலருக்கும் அவர் பணிப்புரைகளை விடுத்துக் கொண்டிருந்ததை அவதானித்திருக்கிறேன். இப்போது டொக்டர் பேச எழுகிருர். நன்ருகக் காதைத் தீட்டிக் கொள்கிறேன் நான்; அவரது கரங்கள் ஏற்கனவே வணங்கும் பான்மையில் தலைக்குமேலே உயர்ந்துவிடுகின்றன, "இங்கு கொலுமியிருக்கும் எல்லோலுக்கும்" எனத் தொடங்குகிருர் டொக்டர். இதைத் தான் எம்முன்னேர் பிள்ளைத் தமிழ் என்று போற்றினரோ?

டொக்டரைப் பார்க்கும் போது மிகவும் மனக் கசிவு ஏற்பட்டது. தமிழினத்திற்கு வாழ்வு தரும் கருத்துக்கள் எவற்றையெல்லாமோ கூற முற்படுகிருர் — பேரார்வத்துடன் கைகளை ஆட்டித் தன் கருத்துக்களை நிறுவத் துடிக்கிருர். அவரது ஆர்வமும் ஆவலும் உணர்ச்சியும் மேலிடும் அளவுக்கு, அவரது கைகள் அபிநயிக்கும் அளவுக்கு, அவரது தமிழ் வார்த்தைகள் நாவிலிருந்து புரண்டு வீழத் தயங்குகின்றன. மிகவும் அவஸ்தைப்படுகிருர். இடையிடையே தன்னை மறந்து ஆங்கிலத்திலும் தொடர்கிருர். என் மனதுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது.

### சமசமாஜத் தவறு:

1952-ம் ஆண்டுத் தேர்தலில் எட்டஇருந்தே டொக்டரின் பிள்ளைத் தமிழைச் செவிமடுத்த நான் 1956-ம் ஆண்டுத் தேர்தலில் மேடையின் மீது அவர் கிட்ட இருந்தே அவரது பேச்சைக் கேட்கக் கூடியவனுயிருந்தேன்,

1952ம் ஆண்டுத் தேர்தலில் தமிழரசுக் கட்சியை ஆதரித்ததன் மூலம் — தேர்தல் மொழியில் கூறுவதானல்—சமசமாஜக்கட்சி தந்திரோபாயத்துடன் நடந்து நடந்து கொள்ளவில்லையென்றே கூறுவேன். ஏனெனில் அத்தேர்தலில் சமசமாஜக் கட்சியின் ஈடுபாட்டால் தமிழரசுக் கட்சியை ஆதரித்த பலர், 1956ம் ஆண்டுத் தேர்தலில் தமிழரசுக் கட்சியுடனேயே நின்றுவிட்டனர்; சமசமாஜக் கட்சிக்குத் திரும்பி வரவில்லை.

அதுக் கட்டுப்பாடுகள் இருந்தாலும், வெகுசன இயக்கமான கட்சியில் இவற்றை அக்கறையாக அனுசரிக்கவில்லை. இருப்பினும், நான் கட்சியில் சேரச் சென்ற குறிப்பிட்ட சமயத்தில் கண்டிப்பும் கட்டுப்பாடும் மிக்க அமரர் வன்னியர் கட்சியலுவலகத்திலிருந்து நான் சேருவது பற்றி ஆட்சேபனை தெரிவித்தது இன்னும் நினைவில் நிற்கிறது. இவ்வாட்சேபனைக்கு அங்கிருந்தவர்கள் ஏதோ சாமதானம் கூறியும் அவர் கேட்கவில்லை. மறுநாள் அவரில்லாத பொழுது சென்று சேர்ந்தேன்.

### 1956:ல்

1956ம் ஆண்டுத் தேர்தலில் கட்சியின் பிரச்சார அணியில் நானெருவு புதுமுகமாக இருந்தேன். சாவகச்சேரி, யாழ்ப்பாணம், கோப்பாய்த் தொகுதி மேடைகளிலேயே பெரும்பாலும் பேசினேன். அப்போது அமரர்

தன்மையது? இதனை 1956ம் ஆண்டிலிருந்தே கணித்து வந்தேன். அவரது தமிழ்ப் பேச்சு அபரிதமான வளர்ச்சியடைந்தது உண்மையே. சில சமயங்களில் மேடையிலிருக்கும் ஏனைய தலைவர்களையே பிரமிப்பிலாழ்த்தியுள்ளார்.

## (2) கொஞ்சலும் கெஞ்சலும்

உதாரணமாக, 1959ஆம் ஆண்டிலென நினைவு. சிங்களத் தலைவர்களுக்கெதிராக தமிழ் மாநிலத்தில் வெறுப்பும், குரோதமும் மிகுந்திருந்தன. சிங்களத் தலைவர்களின் இனவெறிச் செய்கைகளும் பேச்சுக்களும் இத்தகைய குரோதங்களை வளர்த்திருந்தன. டொக்டர் சிங்களத் தலைவர்களுடன் கலந்து உறவாடுபவர் என்பது தெரிந்ததே. கொழும்பில் ஒரு விழாவின் போது டொக்டர் சேர். ஒலிவர் குணதிலக்காவை முத்தமிட்டதாகத் தினசரியொன்றில் செய்தி வெளிவந்திருந்தது.

தமிழரசுக் கட்சிக் கூட்டங்களில் எழுத்தில் தரப்படும் கேள்விகளுக்கு விடையிறுக்கும் பண்பாடொன்று வன்னியரால் பேணிக்காக்கப் பட்டு வந்திருந்தது. குறிப்பிட்ட செய்தி வெளிவந்த சில நாட்களுள் யாழ் முற்றவெளி மைதானத்தில் நடைபெற்ற கட்சியின் மாபெருங் கூட்டமொன்றில் கூட்டத்திலிருந்த ஒரு அன்பர் டொக்டரின் செய்கைக்கு விளக்கம் கோரினுர். பொறுமையற்றிருந்த ஏனைய தலைவர்கள் அக்கேள்வியை டொக்டரிடமே கையளித்தனர். டொக்டர் கேள்வியைப் புரிந்து கொண்டே ஒலிவாங்கியின் முன்னர் வந்தார்; ஒரு கணம் தாமதித்தார்; பின் 'ஐயா' என்ருர். கூட்டத்திலிருந்தோரோ டொக்டர் தம் மழலைத் தமிழில் என்ன சொல்வாரோ என எதிர்பார்த்தனர்; மேடையிலிருந்த தலைவர்களோ என்னென்ன வெல்லாம் சொல்வாரோ எனத் தயங்கியிருந்தனர். டொக்டரோ மறுகணம் மூடிய முஷ்டியுடன் தன் இரு கைகளையும் உயர்த்தி அலாதியான அபிநயத்துடன் அடுக்கு மொழியில் சொன்னுர்: "நாங்கள் கொஞ்சுவோம் கெஞ்சமாட்டோம் ஐயா" என்ருரே பார்க்கலாம்; கூட்டத்தில் ஒரே கையொலி; மேடையிலிருந்த தலைவர்களுக்கே ஒரே பிரமிப்பு. அடுக்குமொழி மன்னர் நறுக்காக விடையிறுத்துவிட்டு மிடுக்காக மேடையில் வந்து அமர்ந்து கொண்டார். பின் டொக்டரின் பதிலடியைப் பலரும் பாராட்டினர். அவருக்கும் ஒரே பெருமை.

இது டொக்டரின் சாதனையின் ஒரு பகுதி மட்டுமே. அவரது தமிழ்ப் பேச்சின் சாதனையால் உயிரோடிருந்த ஒருவரை இறந்தவராக்கிய சங்கதிகளும் உண்டு. அவற்றைப் பின்னர் பார்ப்போம்.

(வளரும்)

**கரிகாலன்**

## ஓயாமல் உழைத்தவர்கள் ஓய்ந்தனரே!

"எமது நீடித்த போராட்டத்தில் உடலூறு பட்டவர்களும் பொருளூறு பட்டவர்களும் மிகப் பலர். எமது தோழர்களில் சிலர் தமது இலட்சியப் பற்றின் காணிக்கையாகத் தமது இன்னுயிரையும் அர்ப்பணித்தனர். திருவாளர் வன்னியசிங்கத்துடன் தொடர்பான ஒரு சம்பவம் எனக்கு இக்கட்டத்தில் நினைவுவருகிறது. அவர் பிரிவுக்கு ஒரு மாதத்துக்கு முன் உடல் நிலையைப் பரிசோதித்த பின் அவரைக் குறைந்தது நாலு மாதங்களுக்காவது நிறைவான ஓய்வு பெற்றுக் கொள்ளும்படி எச்சரித்தேன், கண்களில் நீர் மல்க அவர் என் கரம் பிடித்துக் கூறிய பதில் இது தான்;—

'எவ்வித ஓய்வையும் நான் பெறுவதெப்படி? செய்யவேண்டியது மலைபோன்றிருக்கின்றன. செய்து முடித்ததோ சொல்லக்கூடியதாய் இல்லை. எம் பணியில் தம்மை அர்ப்பணித்தோர் தொகையும் மிக அற்பம். இல்லை வைத்தியரே, பெருந்தொகையில் எமது இளைஞர்களும் களும் இளம்பெண்களும் முழு இதயத்தோடு எமது இயக்கத்தில் சேரும் வரை அல்லது இறைவன் தன் கருணையில் நிரந்தர ஓய்வு அளிக்கும் வரை நம்முள் எவரும் ஓய முடியாது. ஓய்வு பெறவும் மாட்டோம்"

—டாக்டர் நாகநாதன்

(கல்முனை மாநாட்டு தலைமை உரை)

1956ம் ஆண்டுத் தேர்தலில் யாழ்ப்பாணத் தொகுதியில் சமசமாஜக் கட்சி வேட்பாளர் திரு. அ. விசுவநாதன் (1952ல் டொக்டர் நாகநாதனுக்காகப் போட்டியினின்றும் விலகியவர்) போட்டியிட்டாராயினும், அரியாலை சுண்டிக்குளி வட்டாரங்களில் வாழ்ந்த அவரது உறவினர்களில் பெரும்பாலோர் தமிழரசுக் கட்சியிலேயே தங்கிவிட்டனர்.

எமது சுற்றுடல் அணியிலும் இம்மனப் போக்கு பிரதிபலித்தது. 1956ம் ஆண்டுத் தேர்தலில் சமசமாஜ அரண்களெங்கும் தமிழரசுக் கட்சியின் மூவர்ணக் கொடி பட்டொளி வீசிப் பறந்தது.

இம் மனப்போக்குக்கு அன்றிருந்த நேரடிக்காரணம் கட்சிப்பிடிப்புஎன்று கூறமாட்டேன். டொக்டர் நாகநாதனை வெல்லச் செய்ய வேண்டும் என்பதும் திரு. பொன்னம்பலத்தைத் தோற்கடிக்க வேண்டும் என்பதுமே அன்று இவர்கள் மத்தியில் தலையாய காரணங்களாயிருந்தன. டொக்டர் அரியாலை மக்களால் மிகவும் நேசிக்கப்பட்டார்.

நானும் 1956ம் ஆண்டின் பிற்பகுதியிலேயே தமிழரசுக் கட்சியில் சேர்ந்திருந்தேன். கட்சியில் சேருவதற்கு வய

வன்னியரின் நிழல் என் மீது நன்ருகப் படிந்திருந்த நேரம் அது. அன்று நான் சிறுவன் என்ற நிலையைக் கடந்து வயது முதிர்ந்திருந்தாலும் அமரர் வன்னியர் கூட்டத்திற்குச் செல்லும் போது என்னையும் வந்து காரில் கூட்டிச் செல்வது எனக்கும் பெருமையாக விருந்தது.

சாவகச்சேரித் தொகுதியிலிருந்த பூநகரி என்ற கிராமத்தில்தான் (இன்று பூநகரி கிளிநொச்சித் தொகுதியில்) நான் முதன் முதலாக மேடையேறினேன். இங்கு இந்நாள் பா. உ. திரு. வ. ந. நவரத்தினத்தின் 'பிள்ளைத் தமிழை'க் கேட்கும் பாக்கியமும் கிடைத்தது. தவறிழைத்து விடுவோமோ என்ற பயத்தில் திரு. நவரத்தினம் முன்பு சுருக்கமாகவே பேசுவார். தலைமைவகித்துக் கூட்டம் நடத்தும் கலையில் கை தேர்ந்த அமரர் வன்னியரே 'நவரத்தினம் இரத்தினச் சுருக்கமாகப் பேசினுர்" என்று கூறி வார்த்தைச் சிலம்பத்தால் பூசிமெழுகுவார். இன்று திரு. நவரத்தினம் பிள்ளைத் தமிழா பேசுகிருர்? பீரங்கிப் போலல்லவா தொடர்ச்சியாக மணிக்கணக்காக முழங்குகிருர்.

கொஞ்சுவோம்;

கெஞ்சமாட்டோம்:

[illegible]

டொக்டரின் வளர்ச்சி எத்

### அண்ணுவின்...

(8ம் பக்கத் தொடர்ச்சி)

பொறுமை காட்டிய அண்ணு. குற்றம் பார்க்கிற் சுற்றமில்லை என்ற பேருண்மையையும் எடுத்துரைத்தார்.

இந்தி எனும் புற்றுநோய் இன் தமிழ் இனத்தைத் தாக்கி இனிய தமிழை உருக்குலைக்க முனைந்தபோது அதனுடன் நீண்ட காலமாய் போரிட்டு —ஆண்டுக் கணக்கில் எடுத்துக் கூறின் 1937 தொடங்கி 1969 வரை — ஆம்! ஏறக்குறைய 32 ஆண்டுகளாகப் போரிட்டு பெருமளவு வெற்றி கண்ட இப்பெருமகன் தன்னைத்தாக்கிய புற்றுநோயை இயன்றவரை எதிர்த்தும் இறுதியில் தோல்வி கண்டது உண்மையில் தமிழ் இனத்தின் தவக்குறை என்றே கூறியாக வேண்டும்.

'பேச்சில்லை! மூச்சில்லை! பிப்ரவரி மூன்றினிலே போச்சே முத்தமிழின் பொன்று உயிர்தெய்வ உயிர்" என்று மக்கள் கதறியழ கண்ணீர்க் கடலில் மக்கள் தவிக்க எம்மை விட்டுப் பிரிந்துவிட்டார்.

## நாகநாதன் ஆத்மசாந்திக்கு பாடற் பூசை.

அமரர் டாக்டர் நாகநாதன் அவர்களின் ஆத்மசாந்திக்காக 18. 9. 71மாலை 5.30 மணிக்கு நல்லூர் திருநெல்வேலி புனித சவேரியார் ஆலயத்தில் யாழ்ப்பாணம் மேற்றிராசனப் பிரதம குருப்பிரசாதிகளால் பல உதவிக் குருமார் புடைசூழ கன்னியாஸ்திரிமார் குருமடப்பிள்ளைகள் சகிதம் அஞ்சலிக் கூட்டுப்பிரார்த்தனையும் திவ்விய பாடற் திருப்பலிப் பூசையும் ஒப்புக் கொடுக்கப்பட விருக்கிறது.

இதற்கான ஏற்பாடுகளைத் திருநெல்வேலியைச் சேர்ந்த திரு. ஜே. என். பொன்னையா கவனித்து வருகிருர்.

அரசாங்கம் என்பது வீடு ஆளும் கட்சி அதை வாடகைக்கு எடுத்துக்கொள்கிறது. மக்களின் நல்லெண்ணமதான் வாடகைப்பணம். ஜனநாயக உணர்வு அதை ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை கணக்குப் பார்க்கிறது. —அண்ணு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்ணாவின் தமிழ்ப் பணி

அறிஞர் அண்ணா அவர்கள் தமிழ் இனம் தனது இழந்த பெருமையினை மீண்டும் பெறவேண்டின் தமிழ் இனத்தில் ஆழப் பதிந்திருக் அழுக்குகளை நீக்கி தூய்மைப் படுத்துவதே தனது தலையாய பணி என்று கருதியவர். 'நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய் நாடி வாய்ப்பச்செயல்' என்று வள்ளுவர் மொழிந்த திற்கமைய தமிழ் இனத்தின் அடிப்படை நோயின் தன்மையை உணர்ந்து சமுதாயச் சீர்திருத்தத்தில் ஈடுபட்டார்.



எம் சமுதாயத்தைச் சீர் குலைக்கும் சாதி வெறியைச் சாடிய அவர் நம் சமயத்தில் அழுந்திக்கிடந்த மூட நம்பிக்கைகளோடும் மோதினார். குருட்டு நம்பிக்கைகளை குழி தோண்டிப் புதைப்பதில் அவர் ஈட்டிய வெற்றி அளவிடற்கரியது. இதனால்தான் நம் தமிழ்த்தென்றல் திரு. வி. க. அவர்கள் அண்ணாவின் பெருமையை அன்றே தன் அருங் கவிதையில் முதல் இரண்டு வரியில் பின்வருமாறு மொழிகிறார்.

'அண்ணாத்துரை எனும்
அண்ணல்
தமிழ் நாட்டு வண்ணான்
அழுக்கெடுப்பில்'

அவர்கள் கூறியதற்கமைய தமிழ் நாட்டின் அழுக்கை நீக்குவதில் தமிழ் நாட்டு வண்ணானாக விளங்கியவர் அறிஞர் அண்ணா அவர்கள்.

எனினும் எப்படி வண்ணான் ஒருவன் அழுக்கெடுக்கும் ஆவலில் சில துணிகளை கிழிப்பதற்கு காரணமாகிறானோ அதுபோன்றே அண்ணாவும் அழுக்கெடுக்கும் ஆவலில் சில வேளைகளில் எல்லை மீறியதும் உண்டு. ஆனால் அவர் வாழ்ந்த அந்தச் சூழ் நிலையில் அவருடைய தீவிர கருத்துக்களுக்கும் தேவையிருந்ததென்பதையும் மறுக்க முடியாது.

### மறைமலை — திரு. வி. க. அண்ணா ஒப்புநோக்கு

எல்லாம் தமிழிற் செய்தே எம் வாழ்வாம் தமிழைக்காப் போம். என்ற கோட்பாட்டில் ஊறித்திளைத்தவர் மறைமலையடிகளார். இந்த அடிப்படையில் அடிகளார் தனித் தமிழ் இயக்கத்தை தோற்றுவித்தார். ஆனால் இந்த இயக்கம் புலவர் நிலையிலேயே பெருமளவு நின்றது அதைச் செய்தி இதழ்களில் கையாண்டும் அரசியல் மேடைகளில் முழக்கியும் ஓரளவு பொது மக்கள் நிலைக்கு இறக்கி அம்மக்களிடை பரவத் துணைநின்றவர் தமிழ்த்தென்றல் திரு. வி. க. அவர்கள்;

மறைமலையடிகள் தொடக்கியதை—திரு. வி. க. தொடர்ந்ததை 'பொது மக்களிடை முழுமையாகப் பரப்பி பேரியக்கம் தோற்றுவித்து—தமிழின் தனித்தன்மையைப் பேணுவதில் மாபெரும் வெற்றி ஈட்டியவர் அறிஞர் அண்ணா அவர்கள்.

### மறைமலையின் தமிழ் இயக்கம் பற்றி அண்ணா

அறிஞர் அண்ணாவிற்கு மறைமலையடிகளாரின் தனித் தமிழ் இயக்கத்தில் எவ்வளவு தூரம் ஈடுபாடு இருந்ததென்பதற்கு அடிகளார் பற்றி அவர் மொழிந்த பின்வரும் சொற்றொடர்கள் சான்றாய் அமையும்;

'மறைமலையடிகளின் திருப்பெயர்—பெற்றோர் இட்ட பெயர் வேதாசலம் என்பதாகும். அதனை அவர் மறைமலையடிகள் என மாற்றிக் கொண்டபோது பலருக்கு ஐயப்பாடு; சிலர் இது என்ன புதியதோர் ஆபத்து? என்று கேட்டனர்.

'ஆனால் மறைமலையடிகளாரோ தமிழனுக்கு எனத் தனிப்பண்பு உண்டு; மொழி உண்டு என்பதை நிலைநாட்டுவதில் மிக்க அக்கறைகாட்டினார்; இந்தப் பண்பும் மொழியும் காப்பாற்றப்படாவிடின் நாளாவட்டத்தில் தமிழர்கள் இந்த மொழியையும் மறந்து தங்களுக்கென உள்ள சீரிய தன்மையையும் இழந்துவிடுவர். உலகில் இன்றுள்ள வாழ்விழந்த இனத்தாரோடு தமிழரும் சேர்க்கப்பட்டுவிடுவர்.

எனவே தமிழர்கள் தங்கள் மொழியையும் பண்பையும் மறந்து விடக்கூடாது என்பதற்காக மறைமலையடிகளார் தனித் தமிழ் இயக்கம் என்ற பேரால் சீரியதோர் முயற்சியை மேற்கொண்டார்.

'இந்த இயக்கத்தை அவர் தோற்றுவித்தபோது இது வெற்றிபெறுமா! என்று சிலரும் இது தேவைதானா? என்று வேறுசிலரும் இதனால் தமிழகத்திற்கும் தமிழர்களுக்கும் என்ன நன்மை? என மற்றும் சிலரும் வினவத் தொடங்கினார்கள்.

'ஆனாலும் இன்று யார் நடாததுகின்ற ஏடானாலும்—தனித் தமிழ் இயக்கத்தை எதிர்த்தவர்கள் ஏடானாலும் அதில் தனித் தமிழ் நடை கையாளப்படுவதை நாம் காண்கிறோம்'"

### அண்ணாவும் அருந் தமிழும்

இவ்விதம் மறைமலையடிகளாரின் தனித் தமிழ் இயக்கத்திற்கு வாழ்த்துரை வழங்கிய அறிஞர் அண்ணா அவர்கள் மற்றுமோர் இடத்தில் எவ்வளவு தூரம் மக்கள் நாவில் நற்றமிழ்ச் சொற்கள் நடம் புரியத் தொடங்கி விட்டதென்பதை தனக்கே உரிய தனி நடையில் 'ராஜ்யம் மறைந்து அரசு வந்து விட்டது. சபை போய்விட்டது; மன்றம் தெரிகிறது. பேரிகை இல்லை, முரசு முழங்குகிறது: மாஜி மந்திரி இல்லை முன்னாள் அமைச்சர் தெரிகிறார்; சத்தியாக்கிரகம் மாறி அறப்போர் பேசப்படுகிறது; சேனாதிபதியைக் காணோம் தலைவன் வருகிறான்; மகாநாடு நடைபெற வில்லை; மாநாடு நடைபெறுகிறது; ஜில்லா மாவட்டமாவிட்டது மாகாணம் மாநிலம் ஆகிவிட்டது. தமிழ் வெல்கிறது. தமிழின் மாற்றார்களோ என்று யாரைப் பற்றி அஞ்சினோமோ அவர்களின் அருந் தொண்டும் தமிழுக்குக் கிடைக்கிறது.' என்கிறார்.

### தமிழ் வாழ்ந்தாற்தான் தமிழர் வாழ்வர்

இவ்விதம் தமிழின் தனி இயல்பை பேணிக்காப்பதில் பேரார்வம் காட்டிய அண்ணா அவர்கள் தமிழ்ச் சமுதாயத்தை எந்த அடிப்படையில் கட்டிக்காக்க முடியும் என்பதை 3-1-1968ல் அனைத்துலக தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் நிகழ்த்திய பேருரையில் எம் அறிவுக் கண்ணைத் திறக்கும் முறையில் இனிது எடுத்து இயம்பியுள்ளார். இதோ அப்பகுதி.

"தமிழ்ச் சமுதாயம் தமிழ் மொழியின் அடிப்படையில் தான் இயங்குகிறது. இதை உணர்ந்திருந்தாலும் எடுத்துச் சொல்ல முடியாமல்—எடுத்துச் சொல்லும் வகையறியாது நாம் இருக்கலாம்.!

'ஆனால் தமிழ் வாழ்ந்தால் தான் தமிழர் வாழ முடியும். தமிழர் வாழ்ந்தால் தான் தமிழ்ச் சமுதாயம் வாழ முடியும் என்று நாம் உள்ளார உணர்ந்திருக்கிறோம்.'

### ஆங்கிலத்தில் அருந்தமிழின் ஆற்றலை விளக்கியவர்

எதுகை மோனையுடன் இனத்திற்கு எழுச்சி யூட்டிய அண்ணா அவர்கள் ஆங்கிலத்தையும் அழகுறக்கையாண்டு அதன் ஊடாகவும் தமிழின் பெருமையை நிலைநாட்டியவர். 10-1-68ல் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் சென்னை பல்கலைக்கழக நூற்றாண்டு மண்டபத்தில் அனைத்துலக அறிஞர் முன்னிலையில் தமிழின் பெருமையை பின்வருமாறு எடுத்து மொழிந்தார்.

"Tamil has a Vitality, a fertility and adaptability and Versatility unequalled by any other language."

இப் பேச்சினை முழுமையாக நேரிற்கேட்கும் பேறு பெற்றவன் யான். என் வாழ்வில் மறக்க முடியாத நிகழ்ச்சிகளுள் இதுவும் ஒன்றாகும்.

### இலக்கியத்தில் புதிய சமையல் செய்தவர்

தமிழை வாழ்வித்த அண்ணா அவர்கள் தமிழுக்கு வளம் ஊட்டவும் தயங்கியதில்லை. அவரின் இலக்கியப் பணி வரலாறு, கதை, கட்டுரை, கவிதை, நாவல், நாடகம், திரைப்படம் எனப் பல படவிரிகிறது.


'எதைச் சொல்லி முடிப்பேன்! அண்ணா எண்ணாத துறையே இல்லை! என்று ஒரு கவிஞன் மொழிந்த கூற்று வெறும் வெற்றுரையல்ல—ஆனால் பொருள் பொதிந்த பொன்னுரையாகும்.

**ஈழவேந்தன்**

பல சுவை உணவைப் படைக்கும் சமையற்காரன் போல் இலக்கியத்தில் பல துறைகளில் சுவையானவற்றைப் படைத்துத் தந்தவர் அண்ணா. அவர்கள் அதனாற்றான் கதைகளால், நாடகத்தால் கட்டுரைத்திறத்தால் பேச்சால் சிதைவிலாக் கருத்தை ஆக்கிச் சிந்தனை விருந்து வைக்கும் புதையலாம் அண்ணா நாட்டின் புதுமுறைச் சமையற்காரர்' என்று ஒரு தமிழ்க் கவிஞன் சாற்றும் கருத்து சால்புடைய கருத்தேயாகும்.

### பண்பாட்டின் திருவுருவம்.

நீதிக் கட்சியில் உருவாகிய அண்ணா அவர்கள் தமிழர்



கட்சியில் வளர்ந்து திராவிடக் கழகத்தில் பெரியாரின் பேரன்பைப்பெற்ற அடியவனாய்விளங்கி, தி. மு. கழகத்தை தோற்றுவித்து தென்னகத்தமிழரை வழி நடாத்திய தனிப்பெரும் தலைவராகதலையெடுத்து உலகத் தமிழர் உள்ளங்களிலெல்லாம் உறைவிடம் பெற்ற பெருமகனாக விளங்கியவர் அண்ணா அவர்கள்.

படிப்படியாக உயர்ந்து இறுதியில் உலகின் கவனத்தையே ஈர்த்து விளங்கிய அண்ணா அவர்கள் 'உங்களுக்காக நானல்ல—உங்களால் நான்' என்று அடிக்கடி கூறி தன்னடக்கத்தின் திருவுருவமாக விளங்கினார்:

"அடக்கத்தோடு பணியாற்றுவேன். அமைச்சர் பதவி வரும் போகும். ஆனால் இத்துணை நாள் கட்டிக்காத்து வளர்த்த பண்பாடு போனால் வராது; எனவே பண்பாட்டை இழக்க மாட்டேன்" என்று மொழிந்த அண்ணா அவர்கள் வள்ளுவரின் சான்றாண்மையின் ஒளி விளக்காய் ஒளி விட்டார்.

### மொழிந்த மறைமொழிகள்

'கடமை கட்டுப்பாடு, கண்ணியம் என்ற நிறை மொழியை தமிழ் இனத்திற்குத் தந்த அண்ணா, கொள்கை மறவாதீர் என்று அறிவுறுத்தினார். கோபத்திற்கு ஆளாகாதீர் என இடித்துரைத்தார்: கூடி வாழ்வது பொறுப்பான செயல் என்று

(8ம் பக்கம் பார்க்க)

## கண்டே திரும்பாயோ?

கண்ணாந் தமிழ் காக்கும் படை கண்டாய்,
புகழ் கொண்டாய்!
அண்ணா, எமதண்ணா உனை அரை நாழிகையேனும்
எண்ணா திருப்போமோ? எமதிதயம் விடுமாமோ?
மண்ணாகிடும் வாழ்வே உனை மறவோம் மறவோமே!

தம்பி எனில் தம்பிநிதி தங்கத்தினில் வார்த்த
கம்பி அவன்! கலைஞன் அவன்! கன்னித் தமிழ்காவின்
தும்பி அவன்! கவிதைச்சுவை துய்ப்பான்! தமிழ்நாடு
நம்பி அவன் பின்னால் புது நடைபோடுது பார் பார்!

உன்பாதையில் தவறாமலே உன்தம்பியும் செல்வான்
பின்போர் துயர் உண்டோ? வழி பிழையாவதும்
உண்டோ?
தன்பாட்டினில் தமிழாட்சியில் தமிழ் நாடினி செல்லும்
மூன்போர் முறை மூவேந்தரின் முறையாட்சியைப்
போன்றே!

ஈழத்திருந்தாலும் எனதெண்ணம் தமிழ் நாட்டைச்
சூழத்திரிவதுவும் உனதன்பின் தொடர்பண்ணா!
ஆளத்தெரியாதார் தரும் அல்லல் தவிர்த்தே யாம்
மீளத்தகுநேரம் இவண் விரைவில் வரும் அண்ணா!

உந்தன் பிரிவாலே உறு துயரைத் தமிழ் நாட்டார்
உந்தன் கலைத்தம்பி தரும் உரையால் மறக்கின்றார்!
செந்தேன் தமிழ்க் கவிதையொடு திருவள்ளுவர் ஆட்சி
தந்தே வருகின்றான் தவக் கருணாநிதித் தம்பி!

உலகெங்கணும் உந்தன் புகழ் உண்மைப்படி ஓங்கி
நிலவும்படி அன்றோ நிதி அரசாள்வது கண்டோம்!
சிலபேடிகள் சிலவேளையில் சீறிச் சினந்தாலும்
பலபேர் மனமாரப் புகழ் பாராட்டுதல் கண்டோம்;

தீனாவொடு மூ. க.வையும் தெரிந்தே இணைத்தாயே!
கானா தமிழ்விழை வோர்க்கொரு கன்னல் தருசாறும்!
ஆனால் சிலர் கனையென்றதற் கச்சப்படுகின்றார்!
ஏனாமெனில் தமிழையவர் எதிர்த்தே வருவதனால்!

அண்ணா இவண் வந்தே நிதி ஆளும் முறைதன்னை
கண்ணால் ஒரு முறையாவது கண்டே திரும்பாயோ?
உண்ணா துறங்காமல் உயிர் பேணும் பெறுதாய்போல்
மண்ணாண்டிடும் உன் தம்பியின் மகிமை பெரிதண்ணா!

'தாமரைத் தீவான்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்ணாபோல் யாருளர்?

பா. விவேகானந்தா
(ஈழமாறன்)

“நம்முடைய பரம்பரை பெரியது, நமது தமிழினம் மானமே பெரிதென மதித்த இனம். எவ்வுயிரையும் தன்னுயிர்போல் காத்து வந்தவன் தமிழன். பிறரை எதிர்பார்த்து வாழாதவன் தமிழன். பிறருக்குப் புறமுதுகு காட்டி ஓடாதவன் தமிழன்.”

இப்படி சரியாக இருபதாண்டுகளுக்கு முன்னர் தமிழனுக்குத் தமிழன் யார் என்பதை எடுத்துக் கூறியவர் மறைந்த மேதை பேரறிஞர் அண்ணா அவர்களாகும்.

இருபதாண்டுகளுக்கு முன்னர் தாயைத் தாய் என்று கூற வெட்கப்படும் தனயன் போல தமிழ் நாட்டுக்கு ‘தமிழ் நாடு’ எனப் பெயர் சூட்ட மறுத்து வெட்கப்பட்ட தமிழர்களது ஆட்சியைக் கண்ட அண்ணா அவர்கள் தாம் தொடக்கிய சமுதாய சீர்திருத்த இயக்கத்தினை மக்கள் விருப்பிற்கமைய அரசியற் கட்சியாக்கிப் படிப்படியாக 1967 இல் ஆட்சியைக் கைப்பற்றியதும் முதன் முதலாக அண்ணா அவர்கள் தாம் தமிழன் என்பதைத் ‘தமிழ் நாடு’, ‘தமிழக அரசு’ என்று பெயர்கள் சூட்டி அவற்றைச் சட்ட பூர்வமான தாக்கிய செயலின் மூலம் நிறுவினார்.

சாதி, சமயப் பூசல்களால் பிளவு பட்டு கிடந்த தமிழினத்திடையே ‘சாதிப்பேயை ஒழித்து சமயப் பூசல்களை துறந்து ஒன்றுபட்ட தமிழினத்தை உருவாக்கி, பாவேந்தர் பாரதிதாசன் கண்ட கனவான ‘தமிழாய்ந்த தமிழன் தமிழ் நாட்டை ஆள வேண்டும்’ என்பதையும் நனவாக்கி குறள் நெறி பரப்பும் வகையில் பேருந்து வண்டிகளில் குறள் பாக்களைப் பொறிக்கச் செய்து, அமெரிக்க நாட்டிலும் தான் சென்ற போதில் குறள் வகுப்பு நடாத்தி குறள் பரவும் வகை செய்த பேரறிஞன் அண்ணா போல் எவருண்டு!

தமிழிற் பிறந்து, தமிழில் வளர்ந்து, தமிழிலேயே தன் வாழ்நாள் கழித்து தமிழிலேயே இரண்டறக் கலந்து விட்ட தமிழன் அண்ணா-தன் வாழ்வின் இறுதிக் காலத்திலும் தமிழனைக்கு தான் பெயர் சூட்டியதைக் கொண்டாடும் விழாவில் பங்குபெறுவதையே தன் கொடிய நோயிலும் பெரிதாக எண்ணி மகிழ்ந்து பங்கு பற்றி உரையாற்றியவர் பேரறிஞன் அண்ணா வன்றி யாருளர்?

அண்ணாவை 4 ஆண்டுகளின் முன்னர் தூற்றிய நாவெல்லாம் கூட இன்று போற்றுகிறது என்றால் 4 கோடி மக்களின் இதயங்களை அண்ணா எப்படி ஆட்கொண்டுள்ளார் என்பதை உணரலாம்.

நான் கடந்த 22 ஆண்டுகளாக தி. மு. க.வில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டுள்ளவன். இருந்தும் பேரறிஞர் அண்ணாவை நான் சந்தித்தது 1961ல் தான். அந்த நேரம் நான் அவருடன் பேசியவை, அவர் என்னிடத்து கூறியவை யாவும் இங்கு தற்போதைக்குக் குறிப்பிட முடியாதவை; ஆனால் ஒன்றைமட்டும் குறிப்பிடுகிறேன்.

“தம்பி, தமிழர் எங்கு வாழ்கிறார்களோ அந்த நாட்டிற்கு பற்றுடையோராய், அந் நாட்டின் குடிமக்களாய் தங்களை மதித்து அந்த நாட்டின் முன்னேற்றத்திற்கு உழைத்திட வேண்டும்”

இதுதான் அந்த தமிழ்த் தாயின் தலைமகன் என்னிடம் கூறியவை. அண்ணா அவர்களோடு சேர்ந்து ஓர் புகைப்படம் எடுத்துவிட வேண்டும் என்ற ஆவலில் “அண்ணா, நான் தங்களுடன் ஓர் புகைப்படம் எடுத்துவிட விரும்புகிறேன்” என்று கூறியபோது “என் உள்ளத்தையா, உடலையா” என்று நகைச்சுவையுடன் கூறிக்கொண்டே மறுமுறை வரும்போது செய்வோம் என்ற பெரியவன் பின்னர் என்னைக் காணாமலே கண் உறங்கிய கொடுமையை என்ன செய்வது? யாரிடம் சொல்வது?

‘தம்பி’ என்ற பாசத்தால் ‘அண்ணா’ என்ற பாச உணர்வால் ஒரு மாபெரும் மக்கள் இயக்கத்தைக் கட்டியெழுப்பி ஆட்சியைக் கைப்பற்றுமளவுக்கு இலட்சோப லட்சம் மக்களது மனங்களில் இடம் பிடித்து அம்மக்களது பாசத்திற்கும் ஆளான தலைவன் யாருளர்? பாசத்தால் கட்சி வளர்த்தவன் ‘அண்ணா’ அன்றி அகில உலகிலும் வரலாறு காணாத வரலாறு படைத்தவன் யாருளர்?

# தமிழ் மக்களுக்காக வாழ்ந்த நெஞ்சம்!

அரசியல் வாதிகள், அரசியல் தலைவர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் பொதுமக்களோடு எவ்வகைகளில் தொடர்பு கொள்ள வேண்டும் என்பதற்கு எடுத்துக் காட்டாக விளங்கிய கொள்கை வேந்தன் வன்னியசிங்கம் அவர்கள்தான்.

நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் கோப்பாய்த் தொகுதியில் வன்னியசிங்கம் அவர்களுக்குத் தெரியாத குடும்பங்களே இல்லை எனலாம். அறிமுகத்துக்காக அல்லது வாக்குக் கேட்பதற்காக அவர் பொது மக்களோடு தொடர்பு கொள்ளவில்லை. அப்படியான தொடர்புகள் அறுந்து போவதும் ஏன் மக்களை மறந்து போவதும் இயற்கையான சம்பவமே! மக்களோடு அவர் தம் வாழ்வோடு தொடர்பு கொண்டிருந்த படியால் பொது மக்களின் பொருளாதார நிலையை நன்றாக உணர்ந்திருந்தார் அவர்.

கிராமியச் சூழ் நிலையிலும்—சாதி வெறியிலும் நசுக்கப்பட்ட மக்களுக்காக அவர் தலைமை வகித்து நடத்திய விளைபொருள் சங்கங்களின் நிலையையும்—அவற்றின் வியாபார வளர்ச்சியையும்—பொருளாதாரப் பெருக்கத்தையும்—மக்களின் ஒற்றுமையையும்—எண்ணிப் பாருங்கள். மக்களின் நலனுக்காக-தன்னை, தனக்குக் கிடைத்த பதவியை இரவு பகல் இருபத்துநாலு மணித்தியாலமும் செலவிட்டார்.

வியாபார லொறிகளில்—நடு இரவுகளில் அவரது உழைப்பைக் கண்டவர்கள் அநேகர்—அதனால் பெருமை பெற்றவர்கள்—நல்ல தலைவனைத் தேர்ந்து எடுத்து நற்பயனைப் பெற்றவர்கள் கோப்பாய்த் தொகுதி மக்கள்: அந்த விவேகமும் வீரமும் சில தொகுதிகளில் இன்றும் கை கூடவில்லை.

தொகுதியின் பிரதிநிதியாக மட்டுமல்ல கட்சியின் தலைவராகவும் வன்னியனார் பணி புரிந்தார்: கட்சியின் தலைவராக அவர் புரிந்த சாதனைகள் பட்டியலை நாம்

முத்து சுப்பிரமணியம்

தயாரிப்பது இலகுவான காரியமல்ல. ஒரு தலைவன் எதைச் செய்ய வேண்டுமோ அதைக் கவனத்துடன் செய்தார்.

என்றோ ஒரு நாள் மடிந்து போவோமென்பதை அவர் அறிந்திருந்தார். மக்கள் நிரந்தரமாக வசித்து வருவார்கள் அவர்களுக்குப் பின்னும் இச் சந்ததியும் இந்நாடும் இருக்கும் என்பதை நன்கு தெரிந்தார். தமிழர்கள் வாழ்ந்த பல பகுதிகளிலும் தமிழரசுக் கட்சியை நடத்திச் செல்லவல்ல தலைவர்களை உருவாக்கித் தந்தார்.

இன்று தமிழரசுக்கட்சியை இவ்வளவு விசாலமாகக் காணுகின்றவர்கள் அக்கட்சியின் கொள்கைகளை கோப்பாயைவிட்டு வட மாகாணத்தின் சகல பகுதிகளுக்கும் திருமலையிலிருந்து திருக்கோவில்வரை பரப்பி வைப்பதற்கு அவர் பட்ட சிரமம், துயரம் எண்ணக் கூடியதல்ல—பதவியை வைத்து ஆண்ட விதமது; பதவியைப் பயன்படுத்திய நிலையது; இன்று இந்தப் பதவி தொகுதிகளுக்குள் மட்டும் புகுந்து கிடப்பது வேதனைக்குரியதே!

நல்ல தலைவர்களை உருவாக்கியது மட்டுமல்ல—கிழக்கு மாகாணத்தின் விளை பொருட்கள் வடக்கே வரவும்—வட மாகாணத்தின் விளை பொருட்கள் கிழக்கே செல்லவும் திட்டம் தீட்டிச் செயலாற்றினார். மக்களின் வாழ்க்கைத் தரத்தை அறிந்திருந்தார். நெடுந்தீவிலாரம்பித்து திருக்கோவில் வரை ஒவ்வொரு கிராமமும் மனப்பாடத்திலிருந்தது. அவரது நெஞ்சத்தில்—அந்த நெஞ்சம் தமிழ் மக்களுக்காக வாழ்ந்தது அந்த நெஞ்சத்தில் தமிழ் கிராமங்களும்—தமிழர் வாழ்வும் இடம் பிடித்துக் கொண்டது வியப்பல்ல. இந்த உழைப்பின் பலனை நாம் இன்று அனுபவிக்கின்றோம். பிரிந்து—சிதைவுற்று-ஏமாற்றப்பட்டு—தம்மைத்தாமே உணராது வாழ்ந்த இனத்தை ஒன்று சேர்த்த உன்னத தலைவர் வன்னியர் தான்.

# என்னே எம் அண்ணாவின் நாவன்மை?

சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியில் ஒருமுறை அண்ணா அவர்கள் பேச்சாளராகச் சென்றிருந்தார். பேசுவதற்கு முன் “எனக்கு என்ன தலைப்புத் தந்துள்ளீர்கள்” என்று கேட்டார். ‘தலைப்பு இல்லை’ என பதிலளிக்கப்பட்டது. உடனே அண்ணா தலைப்பிலலை என்ற தலைப்பில் பேச ஆரம்பித்தார்,

“ஒரு நாடு தலைமை பெற வேண்டுமானால் அது சிற்றுரிமை மட்டும் பெற்றால் போதாது முற்றுரிமை பெற்றாக வேண்டும். நாடு என்ற தலைப்புக்கே முழு அதிகாரம் அந்த நாட்டு மக்களுக்கு இருக்க வேண்டும் என்பது தான் அரசியல் இலக்கணம். தமிழ்நாடு முழு அதிகாரம் பெறவில்லை. எனவே தமிழ் நாட்டிற்குத் தலைப்பு இல்லை. இந்திய நாட்டிற்குத் தலைப்பு இந்தியா என்று இருக்கிறது. இந்தி மொழித் தலைப்பு இருக்கிறது. பிறமொழியாளர்களுக்குத் தலைப்பு இருக்கிறது. தமிழ் நாட்டிற்குத் தலைப்பில்லை. தமிழ்க் குலத்திற்குத் தலைப்பு இலலை. தமிழனுக்குத் தலைப்பு இல்லை”

என்று எடுத்துக்கொண்ட தலைப்புக்குஏற்புடையவாதங்களை அடுக்கடுக்காக எழுப்பி அவைகளை இலகுவாகவும் பொதுமககள் எளிதில் புரிந்து கொள்ளும் நடையில் பொருள் நயம் குன்றாது “என்னே எம் அண்ணனின் பேச்சாற்றல்” என கேட்டோர் வியப்பும் களிப்பும் அடையும் வண்ணம் ஒரு மணி நேரம் சொற்பொழிவு ஆற்றினார்.

ஒரு தடவை அண்ணா பேசுவதற்கென்று ஒரு கூட்டத்திற்குச் சென்றிருந்தார். பிற பேச்சாளர்கள் வராததால் மக்கள் மத்தியில் சலிப்பும், சலசலப்பும் ஏற்பட்டது. இதனைப் போக்க அண்ணா அவர்கள் பிறர் பேச வேண்டிய தலைப்புக்களையும் தாம் பேச வந்த தலைப்பினையும் எடுத்துக் கொண்டு முன் குறிப்புஏதுமின்றி ஒவ்வொரு தலைப்பை ஒட்டியும் மிகச் சிறப்பாகப் பேசினார்,

அருவி பொழிவதைப் போல அவர் ஆற்றிய சொற்பொழிவு குழுமி இருந்தோரை வியப்பிலும் களிப்பிலும ஆழ்த்திப் பிரமிக்க வைத்தது. அவர் உள்ளத்திலிருந்து எழும் சந்தர்ப்ப உணர்ச்சிக்கேற்ப சொற்கள் அண்ணாவுக்காகக் காத்து நின்றது போன்று சரளமாக வெளிவந்து கொண்டிருந்தன. பொருள் பொதிந்த அவர் பேச்சில தெளிவு இருந்தது. அவர் எடுத்துக் கொண்ட ஒவ்வொரு தலைப்பையும் நிலைநாட்டத் தர்க்கரீதியாகப் பேசினார். அண்ணாவின் பேச்சாற்றலைக் கண்டு வியப்பில் ஆழ்ந்த கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அண்ணாவுக்கு அறிஞர் பட்டத்தைச் சூட்டி மகிழ்ந்தார். அன்று முதல் அறிஞர் அண்ணாவானார்.

என்னே எம் அண்ணாவின் நாவன்மை!

1933-ம் ஆண்டு புதுக்கோட்டை அரசினர் கல்லூரியில் ஒரு கூட்டம் ஏற்பாடாகி இருந்தது. சொற்பொழிவாளராக அண்ணா அவர்களும் அழைக்கப்பட்டிருந்தார். கல்லூரி அதிபர் சமூகம் அளிக்க முடியாமையால் கல்லூரி உப அதிபர் தலைமையில கூட்டம் ஆரம்பமானது. தலைவர் எழுந்து

மார்க்கண்டு
மணிமேகலை
(சுண்டிக்குளி)

“அண்ணாவின் பேச்சுக்குத் தான் தலைமை வகிப்பதே ஒரு புதிர் என்றும் எனவே அந்தத் தலைப்பிலேயே (PARADOX) அண்ணா பேசுவார்” என்று கூறியதுதான் பாக்கி.

குள்ள உருவம் படைத்த அண்ணா அவர்கள் கலைந்திருந்த கேசத்தைக் கையால் தடவியபடி ஏறுநடையுடனும் அவருக்கே உரிய புன்சிரிப்புடனும் ஒலிபெருக்கி முன் வந்து நின்றார். அவர் நீரொழுக்காகப் பேசினார். மிக அற்புதமாகப்பேசினார். அதுவும் ஆங்கிலத்தில் எண்ணக் கலவைகளை விதவிதமாகத் தந்து எழுபது நிமிடங்களுக்குக் கூட்டத்தில் குழுமிஇருந்தோரை மெய்மறக்கச் செய்தார். தமிழில் மட்டும் அல்ல ஆங்கிலத்திலும் அழகாகப் பேசுவேன் என நிரூபித்துக் காட்டினார்.

கூட்டம்முடிந்தது. தலைமை நீதிபதி ஏ. எஸ். பி. அய்யரோ மேடையில் ஏறி அண்ணாவின் கரம் பற்றிக் கை குலுக்கி விட்டு “மிஸ்டர் அண்ணாத்துரை இரண்டே இரண்டு காரியங்களுக்குத் தான் என்னால் ஒரு மணி நேரம் இருக்கையில் இருக்க முடியும். ஒன்று நான் தீர்ப்பு எழுதும்போது—இரண்டாவது எம். எஸ். அவர்களின் இன்னிசையைக் கேட்கும் போது. மூன்றாவதாக என்னை வசீகரித்து அடிமைப் படுத்திவிட்டது தங்களின் ஆழம் காண முடியாத சொற்பொழிவு” என்றார்.

மேற் கூறியது போன்று தமிழில் மட்டும் அல்ல ஆங்கிலத்திலும் எம் அண்ணாவின் நாவன்மைதான் என்னே!

மாற்றுக் கட்சியினர் அண்ணா மனம் புண்படும்படியாக எதைக் கூறினாலும் மாற்றுக் கட்சியினரின மனம் புண்படும்படியான வார்த்தைகள் அண்ணா வாயிலிருந்து மறந்தும் வெளிவரமாட்டா. அதே வேளையில் மாற்றுக் கட்சியினரை சாடுவதில் அண்ணா பின்நிற்கவும்இல்லை. மாற்றுக் கட்சியினரைசாடும் போது கூட தனக்கென்று ஒரு பாணியை வகுத்துக் கொண்டார். அது மாற்றுக் கட்சியினரின் மனதைப் புண் படுத்தாது பண்படுத்தும். அதில் நளினம் பிறக்கும் கனிவு சுரக்கும்.

கூட்டத்திற்குக் கல்எறிந்தவனை நோக்கி கல்லால் எறியாது கனிவான நளினமான சொல்லால் எறிந்தார். “என் சொல்லெறி தாங்காத நீ எங்கே என் கல்லெறி தாங்கப் போகின்றாய்” என கேட்கின்றார். இதிலே “என் சொல்லெறி தாங்காத நீ” என்னும்போது நளினமும் ‘எங்கேஎன் கல்லெறிதாங்கப் போகின்றாய” என்னும்போது கனிவும பிறக்கவில்லையா?

ஒரு சில பழமை விரும்பிகளும பண்டிதர்களும் “குள்ளனுக்குக் குள்ளப்புத்தி” என்றும “நெட்டையனை நம்பினாலும் குட்டையனை நம்பக் கூடாது” என்றும் பேசினார்கள். இதற்கு அண்ணா ஒரு கூட்டத்தில் பேசுமபோது “என்னைக் குள்ளன என்று சொல்லுகிறார்கள். இப்படிச் சொல்லுகிறவர்கள் எல்லாம் அகத்தியனைத் தலைமேலே தூக்கி வைத்துக் கொண்டிருக்கிறவர்கள் ஏனையா...... தமிழைத் தந்த உங்கள் அகத்தியனே குள்ளன் தானே? அண்ணாத்துரை மட்டும் குள்ளனாக இருக்கக்கூடாதா? உங்கள் நியாயம் என்ன நியாயம்.

## 'தமிழன்னைக்...

(6ம் பக்கத் தொடர்ச்சி)

இன்று புறப்பட்டுச் சென்னை சென்று அங்கிருந்து யாழ்ப்பாணஞ் செல்ல வேண்டும்' என்று புறப்பட்டார். யானும் அவருடன் புறப்பட்டேன்.

### இரவு ஒரு மணிக்கு காஞ்சிபுரத்தில்

மருத்துவ மனையினின்று புறப்படும் போது மாலை நேரம் ஆகிவிட்டது. இருவரும் வீதியில் வரும் போது சென்னையில் வாழும் வன்னியரின் சுற்றத்தவர் ஒருவர் சந்தித்ததால் நேரம் அதிகமாகிவிட்டது. இருவரும் பஸ் நிலயத்தை அடைந்த போது சென்னைக்குச் செல்வதற்குப் பஸ் வண்டி கிடையாதெனவும், காஞ்சிபுரம் செல்லும் பஸ் வண்டியிற் சென்று அங்கிருந்து சென்னைக்குச் செல்லலாம் எனவுஞ் சொன்னார்கள். அவ்வாறே இருவரும் வேலூரிலிருந்து காஞ்சிபுரத்திற்கு புறப்பட்டோம். காஞ்சிபுரத்திற்கு ஒன்பது மணிக்கு வந்து சேரவேண்டிய நாங்கள் பஸ் வண்டி இடைவழியில் இயங்கமறுத்ததால் இரவு ஒரு மணிக்கே காஞ்சிபுரம் வந்து சேர்ந்தோம்.

அங்கு விசாரித்ததில் காலை 5 மணிக்கு முன் பஸ் வண்டியோ, புகைவண்டியோ கிடையாதென்றூர்கள். நாலு மணி நேரத்தை எப்படிக் கழிப்பது? என்று கூறிய வன்னியர் வரலாற்றுச் சிறப்பு மிக்க காஞ்சி நகரில் நிற்கிறோம்; திருக்காஞ்சிபுரத்தினை வீதிவலம் வரலாமே என்றூர். என்ன கருத்துப்பட கூறினுரோ?

ஐயா! அண்ணாத்துரை அவர்களின் வீடு சின்னக் காஞ்சிபுரத்திலுள்ளது. அவரைச் சென்று பார்ப்போமே என்றேன். எந்த ஊரில் தொண்டர்களுடன் இருந்து பிரச்சினைகளை அலசுகிறூரோ? வீட்டிலிருந்தாலும் இந்தச் சாமத்தில் சென்று சிறிது அயர்ந்து தூங்குபவரை நாம் உபத்திரவங் கொடுப்பதா? என்றூர். வன்னியஞர்

### எழுதிக் கொண்டிருந்தார் அண்ணு

அந்தத் தெருவாலே போவோம்; அண்ணு விழிப்பாயிருந்தால் தொடர்பு கொள்வோம்; இல்லையேல் காஞ்சிபுரத்தானை வலம் வருவோம். என்று கூறி அழைத்துக் கொண்டு சின்னக்காஞ்சிபுரத்தை நோக்கி நடந்து அண்ணுவின் இல்லம் இருக்கும் வீதிக்குச் சென்றோம். தெருக் கரையிலுள்ள அண்ணுவின் இல்லத்தின் அறையுள் அண்ணு இருந்து எழுதிக் கொண்டிருப்பது சாளரத்தின் வழியாகத் தெரிந்தது. இருவரும் விருந்தைக்குச் சென்று அண்ணுவைப் பார்ப்போம் என்றேன்.

வன்னியர் கையை அசைத்து மெல்லிய தொனியில் 'பாரதூரமான சிக்கலைத் தீர்ப்பதற்கு மக்களுக்கு அறிவுரை வழங்குவதற்காகச் சிந்தனையில் மூழ்கியவாறு எழுதுகின்றூர் போற் தெரிகிறது. சிந்தனையைக் கெடுப்பது பெருந் துரோகம் அதிலும் அரசியல் சிந்தனையை கெடுப்பதுகொடுந்துரோகம்; சிறிது நேரம் தாமதிப்போம்' என்றூர்.

துளி பாலுக்காகப் பல மைல் நடந்து அலுத்தோன் பாற் கடலைக் கண்டது போற் — கஞ்சிக்கு அலைந்தவனுக்குப் பாயாசத்துடன் அறுசுவை உணவு கிடைத்தமை போல அண்ணு வீட்டிலா? நாட்டிலா? வீட்டிலிருப்பினும் விழிப்பா? தூக்கமா? என ஏங்கி ஏங்கி வந்த யான் அண்ணுவைக் கண்டதுமே ஆனந்த வானில் மிதந்தேன்.

### அண்ணு வந்தார்

வன்னியஞர் என்ன சொல்லியும் கேளாது விருந்தைக்குச் சென்று, யன்னற் கதவின் மறைவிலே நின்று ,சார்' என்றேன்; பதிலில்லை; சத்தம் மந்தத் தொனி; கேட்கவில்லை போலும் என எண்ணி சிறிது உற்சாகமாக 'சார் என்றேன்.

உடனே என்னைப்பார்த்தார்; 'எங்கிருந்து இந்நேரத்தில் வருகிறீர்கள்? உங்களுக்கு என்ன உதவி வேண்டும். நீங்கள் யார்? உள்ளே வாருங்கள்' என்றூர் அண்ணு. யாழ்ப்பாணத்திலிருந்து வன்னியசிங்கம் அவர்கள் இங்கே வந்து நிற்கிறூர் என்று யான் கூறுவதற்குள் 'அப்படியா? ஐயையோ உள்ளே வரலாமே? என்று கூறியவாறு துள்ளிக் குதித்து எழுந்து வேகமாக விருந்தைக்கு வந்தார் அண்ணு.

### இருவரும் நோக்கினர்

இதற்கிடையே வன்னியர் அவர்களும் விருந்தைக்கு வந்துவிட்டார்கள். இருவரும் ஒருவரை ஒருவர் பார்க்கிறூர்கள். இருவர் கண்களும் நீரைச் சொரிகின்றன. வாயினின்றும் சொற்களே இல்லை. கிளைகளையுடைய காவிரியும் மகாவலியும் எழுந்து ஒன்றை ஒன்று தழுவியது போல இருவர் கைகளும் நீளுகின்றன. ஒருவரை ஒருவர் இறுகத் தழுவுகிறூர்கள். நெடு மூச்சுக்கள் வெளிவருகின்றன. தழுவியவாறே நிற்கிறூர்கள். ஒரு நிமிடம்; இரண்டு நிமிடம்; மூன்று நிமிடம்; அமைதி; ஒரே அமைதி!

'கண்ணெடு கண்ணினை நோக்கு ஒக்கின்' என்றே வையம் வாழ வழிவகுத்த வண்டமிழ் வள்ளலார் வள்ளுவப் பெருந்தகை கூறினுர். ஆனுல் நீர்க் கண்ணெடு நீர்க் கண்ணின் நோக்கு ஒத்ததற்குப் பலன் கூறவில்லை. வம்புக் காவியமான இராமயண ஆசிரியனும் 'அண்ணலும் நோக்கினுன் அவளும் நோக்கினுள்; என நீரற்ற கண் உணர்வைச் சுட்டினுன். மெய்ப்பாட்டுக்காரரும் அவ்வளவே கூறினர்.

ஆனுல் இத்தியாகசுடர்களின் நீர்க் கண்களின் நோக்கு — ஒத்த உணர்வு— தமிழினலட்சியத்திட்டங்கள் மூன்று நிமிடங்கள் வேகமாகச் சுழன்று முடிந்ததும் 'தமிழன்னைக்காக கால் பேசிலே (காலிமுகத்திடல்) இரத்தம் சிந்திய இவ்வுடலைத் தொடும் பேறு பெற்றேன்' என விம்மியவாறு 'தொத்தாதொத்தா' (அண்ணுவின் சிற்றன்னையார்) என்று அழைத்தார் அண்ணு என்னப்பா?—இதுதொத்தா. இலோனிலிருந்து தமிழர் அறப்போர்த் தலைவர் வந்திருக்கிறூர்' என்று ஆனந்த நிலையில் அண்ணு சொன்னது தான் தாமதம்; தமிழன்னை தலைவிரி கோலத்துடன் இரு தலைவர்களையும் தன் இரு கரங்களால் அணைத்து அவர்கள் மார்பகத்தே தன் முகம் வைத்து அபயங்கேட்ட நிலை போல தொத்தா எழுந்து தள்ளாடிவந்து இருவரையும் அணைத்து வன்னியஞரது நெஞ்சிலே தன் முகத்தை வைத்து சோகம் ததும்பிய குரலில் 'கண்ணின் மணிகளா, அடிபட்டுரத்தங் கொட்டவும், சிறையிலிருக்கவுமா பிறந்தீர்கள்? தமிழனுக்கு விடிவு வராதா? என்று கூறி வன்னியரை முத்தமிட்டு உள்ளே அழைக்க அண்ணுவும் வன்னியரும் தொத்தாவைத் தாங்கியவாறு உள்ளே சென்று அமர்ந்தார்கள். அண்ணு வீட்டிலுள்ளோர் அனைவரும் வந்து சூழ்ந்து வன்னியர்க்கு வணக்கத்தைச் செலுத்தினுர்கள்.

(அடுத்த இதழில் முடியும்)

## தமிழரசு எம்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ளை பா. உ. க்களும் அமைச்சர்களும் நடந்து கொண்டால் நாங்கள் தமிழ் மன்னர்கள் கால மரபுப்படி, நடந்துகொள்ளுவோம். சங்கிலி மன்னன் வாழ்ந்த பூமியில் நாங்கள் சபதமெடுப்போம்''

—இவ்வாறு செல்வநாயகம் மேலும் தெரிவித்தார்.

## தொண்டரை மறவாத் தலைவர்

கடந்த ஆண்டு தேர்தல் சமயத்தில் கொடிகாமத்தில் வைத்து தமிழரசுக் கட்சி தொண்டரான 'ஐயா' சுட்டுக்கொல்லப்பட்டது தெரிந்ததே. 'ஐயா' வின் மரணத்துக்குப்பின் தாம் மாலை அணிவதில்லை என்று சபதம் ஏற்றிருந்தார் கடமை வீரர் வி. என். நவரத்தினம். அண்மையில் இலண்டன் மாநகரத்துக்கு சென்றிருந்த போதும், கட்சிக்காக உயிர் கொடுத்த இத்தொண்டரை மறந்துவிடவில்லை நவரத்தினம். இலண்டனிலுள்ள தமிழர்கள் மாலை அணிவிக்க வந்தபோது, மாலை சூடிக்கொள்ள மறுத்துவிட்ட நவரத்தினம், தாம் ஏற்றுள்ள சபதத்தைகூறியபோது, 'தொண்டரை மறவாத இவரல்லவோ தலைவர்' என்று அங்கு நின்றோர் ஆச்சரியமடைந்தனராம்!

## வன்னியஞரின்...

(7ம் பக்கத் தொடர்ச்சி)

டத்தைப் பாராளுமன்றத்தில் 1958-ல் தீர்மானம்செய்தனர்.

உடனே புத்தசரணங் கச்சாமி, புத்ததன்மம் கச்சாமி புத்த சங்கம் கச்சாமி என மன மொழி மெய்களால் சொல்லுதற்குச் சத்தியம் செய்த ஐந்நூறு பிக்குக்கள் மைத்திரிபாவனை ஒழித்துப் பண்டாவை மிரட்டினராகப், பண்டாவும் ஒப்பந்தத்தைக் கிழித்தெறிந்தனர். அச்சமயத்தில் ஸ்ரீ எதிர்ப்புத் தொடங்கியதாக, பிக்குகள் துவராடையோடு சென்று தமிழ்க் கடைகளைப் பகிஷ்கரியுங்கள், தமிழர்களை தென்னிலங்கையிலிருந்துஒட்டிக் கலையுங்கள் என விளம்பரங்கள் ஒட்டினர்.

ஸ்ரீ இயக்கத்தில் சிறை புகுந்து வெளிவந்த தமிழ்த் தலைவர்கள் இனி என்ன செய்யலாம் என ஆலோசித்தற்கு மகாநாடு கூடினர். 1958ம் ஆண்டு வைகாசித் திங்கள் உள்நாட்டுக் கலகம் ஆரம்பித்ததாக தமிழர்களைச் சிங்களவர் அடித்தும் அலைத்தும் உயிரோடுதீயிட்டும் துன்புறுத்தினர். தமிழகதிகளை மேனுட்டுக் கப்பல்கள் தமிழ் நாடுகளுக்கு எடுத்து வந்தன

அரசாங்கத்தினர்மதிமயங்கித் தமிழரசுக்கட்சியே உண்ணுட்டுக் கலகத்துக்குக் காரணமெனக் கிளந்து தமிழரசுக் கட்சித் தலைவர்களையும் கருமாலோசனை உறுப்பினரையும் தொண்டர்களையும் தடுப்புக்காவலில் இட்டனர். சிறையில் திரு. வன்னியசிங்கம் உதிரவுதைப்பால் மிக வருந்தினர்.

### மறைவு

இங்ஙனம் தன் தியாகத்தால் மண் நாணப் புகழ்பரப்பிய தொண்டர் வன்னியசிங்கம் 1959-ம் ஆண்டு புரட்டாதி மாசம் முதல் நாள் வியாழக்கிழமை பூரணையில் அறிவிழந்து மூர்ச்சையாயினர் எனக் கேள்வியுற்றுத் தமிழுலகு துயரக் கடலிலே மூழ்கியது. மருத்துவர் திகிலடைந்தனர்; வழக்குரைஞர்கள் மயங்கினர்; ஆசிரியர்கள் கலங்கினர்; வணிகர் தம் கடைகளை மூடினர்; கமக்காரர் திகைத்துப் போயினர்; பொது சனங்கள் செயலற்று ஏங்கினர்.

தொண்டர் வன்னியசிங்கம் வானுலகடைந்த செய்தி வானெலி மூலம் பரம்பியதும் அறிஞரும் கலைஞரும் துறவிகளும் பொதுமக்களும் சாதி மத பேதமின்றி நகரசபை மண்டபத்தில் சென்று தம் அநுதாபத்தைக் காட்டினர். அமைச்சருள் ஒருவர் ''திரு. வன்னியசிங்கம் எதிரியாக இருந்த போதிலும் சத்தியத்தைந் கடைப்பிடித்து உழைத்த ஒரு சற்புத்திரன் எனக் கூறினர்.

தொண்டர் வன்னியசிங்கம் [illegible] றும் வாழ்வாராக!

## ஈழவேந்தனின் புதிய நூல்

நவராத்திரி விழாவின் உட்பொருளை உய்த்துணரும் முறையில் 'பேராற்றல் வழிபாடு' எனும் பெயரில் சிந்தனையைத் தூண்டும் ஒரு வெளியீட்டினை தனக்கேயுரிய தனி நடையில் ஈழவேந்தன் வெளியிட்டுள்ளார். இதன் விலை சதம் 25. கிடைக்கும் முகவரி, ஈழவேந்தன், 150, சுபத்திரராம வீதி, நுகேகொடை.

## டாக்டர் கொல்...

(10ம் பக்கத் தொடர்ச்சி)

பல நம்மை நோக்கி கேட்டன. எனவேதான் நாங்கள் மாதிரி சமஷ்டி அரசியலமைப்பு ஒன்றினைத் தயாரித்தோம்.

'நமது மாதிரி சமஷ்டி அரசமைப்புத் திட்டத்தில் நாம் கோருகின்ற சமஷ்டி எத்தன்மையானது என்பதை மிகவும் தெளிவாக குறிப்பிட்டிருக்கிறோம். இத்திட்டத்தை அரசியலமைப்பு அமைச்சரின் பார்வைக்கு அனுப்பியுமிருந்தோம்.

'இந்தத் திட்டம் ஏறத்தாழ சோவியத் நாட்டு அரசியலமைப்பினை யொத்துள்ளதாக சிலர் கருத்து வெளியிட்டனர். நாம் கொடுத்த மாதிரி சமஷ்டித்திட்டத்தின் பதினுருவது அத்தியாயத்தில், மத்திய அரசுக்கு இருந்திடவேண்டிய அதிகாரங்கள் எவை எவை யென்பதை வரையறுத்துக்காட்டியிருக்கிறோம். இதில் சொல்லப்படாத ஏனைய அதிகாரங்கள் அனைத்தும் மாநில அரசுகளுக்கு இருக்கவேண்டும் என்று தெரிவித்திருக்கிறோம்;

'இவ்வளவு தெளிவாக நாம் கூறியிருந்தும், சமஷ்டி பற்றி நம்மிடம் தெளிவான கருத்துக்கிடையாது என்று கூறி அரசியலமைப்பு அமைச்சர் யாரை ஏமாற்றுகிறூர்?

''அதுமட்டுமன்றி, அரசியல் நிர்ணயசபையில் நமது சமஷ்டிக் கோரிக்கையை வலியுறுத்தி நீண்ட உரையொன்றை நான் நிகழ்த்தினேன். அதுபோது நமது திட்டத்தை தெளிவாக விளக்கியிருக்கிறேன். சமஷ்டி அமைப்பினை கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளுங்கள்; ஏனைய பிரச்சினைகளை பேச்சுவார்த்தைகளின்மூலம் தீர்ப்போம் என்று வேண்டுகோள் விடுத்தேன்.

''எல்லாவற்றையும் அன்று கேட்டுக்கொண்டிருந்தும் கேளாக் காதினராக நடந்து கொண்ட அரசியலமைப்பு அமைச்சர் இன்று வாயில் வந்ததை கூறி எம்மைச்சாட நினைக்கிறூர்.

இதிலிருந்து ஒன்று புரிகிறது. நியாயமான நமது சமஷ்டிக்கோரிக்கையை ஏற்றுக்கொள்ள மறுத்ததற்காக மனச்சாட்சி டாக்டர் கொல்வினைக் குடைய ஆரம்பித்திருக்கிறது என்ற உண்மை தான் அது''

இவ்வாறு உடுவில் பா. உ. திரு. வி. தர்மலிங்கம் சுதந்திரனுக்கு விடுத்துள்ள அறிக்கையொன்றில் கூறியுள்ளார்.

## தினபதியாரே சிண்டுமுடியாதே!

### அமிர்தலிங்கம் எச்சரிக்கை!

''தமிழரசுக்கட்சிக்குள் ஆளுக்காள் சிண்டு முடிந்துவிடும் நோக்குடன் பல பொய்ச் செய்திகளை திட்டமிட்டு கட்டிவரும் தினபதியார், எல்லாவற்றிலுமே மூக்குடை பட்டுப்போய், இப்போது என்னையும் பண்டிதர் இரத்தினத்தையும் கொளுவி விடப் பார்க்கிறூர்.

''பண்டிதர் இரத்தினத்தை 12. 9. 71ம் திகதி திருமலையில் நடந்த செயற்குழுக் கூட்டத்தில் நான் தாக்கிப் பேசியதாக 14. 9. 71 தினபதியில் வந்தது அவ்வளவும் பச்சைப் பொய் என்பது தமிழ் மக்களுக்கு நான் சொல்லாமலே விளங்கும்;

''பண்டிதரின் உள்ளத்தை நான் அறிவேன், எனது உள்ளத்தை பண்டிதர் அறிவார்: எனவே எங்கள் இயக்கத்துக்குள் சிண்டி முடிய யாராலும் முடியாது என்பதனை தினபதி யார் அறியட்டும்''

—இவ்வாறு தமிழரசுப் பொதுச்செயலாளர் திரு அ. அமிர்தலிங்கம் சுதந்திரன் நிருபரிடம் தெரிவித்தார்.

## மணவைத்தம்பி தரும் செய்தி

தென்னகத்தில் தாழ்ந்த தமிழ் இனத்தின் விடுதலைக்காக புரட்சி பண்பாடியவர் பேரறிஞர் அண்ணு அவர்கள்—ஈழமணி நாட்டில் ஈன புத்தி படைத்தவர்கள் மத்தியில் இருப்பதை எடுத்து காட்டியவர் இலங்கை வாழ் தமிழர்களின் எழுச்சி மிகு சிங்கம். அஞ்சாநெஞ்சன் அமரர் வன்னியசிங்கம் அவர்களும் அண்ணு அவர்களும் மேலுலகத்தில் இருந்து காணப்போகும் தமிழ் நாடு தனி நாடுக்கான நந்நாளை எதிர்பார்த்து கொண்டு இருக்கிறூர்கள்; வாரீர் தலைவர்கள் இட்ட கட்டளையை எடுத்து செயல் படுவோம்;

## தமிழரசு செயற்குழு முடிவுகள்!

12-9-1971 அன்று முற்பகல் 9.30 மணிக்கு திருமலையில் பாராளுமன்ற உறுப்பினர் திரு. மா. தேமிநாதன் அவர்கள் இல்லத்தில் நடந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

1. இலங்கை குடியரசாகப் பிரகடனப்படுத்தப்படுவதற்கு முன்னர் இலங்கைத் தமிழரசுக் கட்சி தனது மாநில மாநாட்டை நடத்த வேண்டும். அவசரகால நிலைமை தொடர்ந்திருப்பினும், கட்சி மாநாட்டை நடத்தி அதன் மூலம் தமிழ் மக்களின் நிலைமையைத்தெளிவுபடுத்தி கட்சியின் அடுத்த நடவடிக்கையையும் தீர்மானித்திட வேண்டும்.

2. கட்சியின் பொதுச்செயலாளர் தொகுதி தோறும் தீவிர சுற்றுப் பிரயாணம் மேற்கொண்டு கட்சிக் கிளைகளைச் சீரமைத்து உஷார்நிலையில் இயங்கச் செய்ய வேண்டும்.

''தொண்டாற்றுவது என் மதம், எதிர்காலத்தைப் பற்றி நான் அல்லல்படுவதில்லை.''

—மகாத்மா காந்தி.

மில்க் வைட் நீல சோப் மேலுறைகள் 50 அனுப்பி ஒரு அழகிய சரஸ்வதி படத்தையும், நவராத்திரி வரலாறும் தோத்திரப் பாடல்களும் என்ற புத்தகத்தையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க் வைற் சோப் தொழிற்சாலை


த. பெ. இல. 77, — யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5வது வெற்றி வாரம்

கெப்பிட்டல் — பிளாசா — வெலிங்டன்
(கொழும்பு) (வெள்ளவத்தை) (யாழ்நகர்)

நடிகர்திலகம்
சிவாஜிகணேசன்
ஜெயலலிதா
நாகேஷ், சுந்தரராஜன்,
நம்பியார், பண்டரிபாய்
—நடித்த—



# தெய்வமகன்

டைரக்ஷன் A. C. திருலோகசந்தர்

## இப்பொழுது அமோக

வெற்றியுடன் காட்சியளிக்கின்றது
கிங்ஸ்லி — சபயர் — லிடோ
(கொழும்பு) (வெள்ளவத்தை) (யாழ் நகர்)




ஜெமினிகணேசன்
வாணிஸ்ரீ
முத்துராமன் நாகேஷ்
சுந்தரராஜன் சயிலஸ்ரீ
எம். ஆர். வாசு,
டி. கே. பகவதி
—நடித்த—
கே. எஸ் கோபாலகிருஷ்ணனின்

# தபால்காரன் தங்கை

## விரைவில் - சிலோன் என்டர்டெயின்மன்ட் திரைகளில் எதிர்பாருங்கள்

### சென்ட்ரல்
(மருதானை)



ஜெமினிகணேசன்
ஜெய்சங்கர் லட்சுமி
நாகேஷ் விஜயலலிதா
ஸ்ரீகாந்த் மனோரமா
—நடித்த—

# நூற்றுக்கு நூறு

## 4வது ஜனத்திரள்நிறைந்த வாரமாக காட்சியளிக்கின்றது

செல்லமகால் (கொட்டாஞ்சேனை) வின்சர் (யாழ்நகர்) இம்பீரியல் (மட்டு நகர்)

ஜெமினிகணேஷன், (இரு வேடங்களில்) கே. ஆர். விஜயா

பி. எஸ். வீரப்பா, நாகேஷ், நிர்மலா, - மற்றும் பலர் நடித்த -

கதை-திரைக்கதை-டைரக்ஷன்
தாதா மிராசி

# சங்கமம்

(ஈஸ்ட்மன் கலர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா வீதி, 194 ஏ. இலக்கத்தில் 1971-ம் வருடம் புரட்டாதி மாதம் 19-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது —ஆசிரியர் கோவை மகேசன்